**Skylord**
For Travels & Tours
Cheaper Bonded Flights
WORLDWIDE
ANYTIME ANYWHERE
CALL US
020 7565 1111
020 7565 1133

இலவசம்
The UDHAYAN
# உதயன்

**Udaya**
South Indian Restaurant & Take-Away
We specialise in Traditional KERALA Cuisine
105, Katherine Road London E6 1ES
Tel: 020 8470 7400

20 பக்கங்கள் UN-18 Nov. 2001 e-mail: thelondon@udhayan.freeserve.co.uk

HARDWOOD & LAMINATE FLOORING CENTRE
Direct Importers
LOWER PRICE GUARANTEED
SPECIAL DISCOUNTS WITH THIS ADVT.
Tel: 020 8204 2333
306 Honeypot Lane, Stanmore

# யுத்தத்துக்கு

## சிறுபான்மையினர் பெருத்த எதிர்ப்பு

### ஆயிரக்கணக்கானோர் பேரணியில் கலந்து கொண்டனர்

அப்கானிஸ்தான் மீது நடத்தப்பட்டு வரும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தும் படி கோரி 20,000 மக்கள் மாபெரும் பேரணி ஒன்றை நடத்தினர். 13ம் திகதி மதியம் ஹைட் பார்க் கோனரில் ஆரம்பித்த இப்பேரணி மாலை அளவில் ரவல்கர் ஸ்ஹுயருக்கு வந்து சேர்ந்தது. ரவல்கர் ஸ்ஹுயருக்கு யுத்த எதிர்ப்புக்கு எதிரான கோஷங்களை எழுப்பிய படியும் அட்டைகளை தாங்கிய வண்ணமும் மக்கள் சாரைசாரையாக வந்த வண்ணம் இருந்தனர். குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை தனியாகவும் குடும்பங்களாகவும் இப்பேரணியில் கலந்து கொண்டனர். அண்மைய தசாப்தங்களில் இடம்பெற்ற யுத்தத்துக்கு எதிரான பெரும் பேரணியாக இது அமைந்தது. இலண்டனை தவிரவும் ஜேர்மன், பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஸ், இலங்கை என பரவலாக அதே தினத்தில் யுத்த எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது.

சமாதானத்துக்கான பல்வேறு அமைப்புகளால் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்த இந்த ஊர்வலத்தில் முஸ்லீம் மக்கள் பெருமளவில் பங்கு பற்றி இருந்தனர். அல்லாகு அக்பர் என்று கோஷமிட்டபடி பல இளைஞர்கள் தமது எதிர்ப்பை தெரிவித்தனர். பிரித்தானியாவின் பல்வேறு நகலங்களில் வாழ்ந்த முஸ்லீம்களும் சமாதான ஆர்வலர்களும் இந்த யுத்தத்துக்கு எதிரான கடுமையான எதிர்ப்பை தெரிவித்து இருந்தனர். தொழிலாளர் அமைப்புகள், சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புகள், அகதிகள் அமைப்புகள், இடதுசாரி அமைப்புகள் என நூற்றுக் கணக்காண அமைப்புகள் தமது ஆயிரக்கணக்காண தொண்டர்களை ஒரே இடத்தில் ஒன்று சேர்த்து அமெரிக்கா தலைமையிலான யுத்தக் கூட்டுக்கு பெரும் எதிர்ப்பை தெரிவித்தனர்.

Dissent is not Terrorism, Mankind must put an end to War or War will put an end to Mankind, Bush & Blair - War Criminals, War! Not in My Name, Peace & Justice for all, Say No to War என பல்வேறு கோஷ அட்டைகளை தாங்கிய படி மக்கள் கோஷம் எழுப்பினர். இன்னும் சிலர் கோபத்துடன் Bush Loves Muslim's Blood என முழங்கினர். ஒரு சிறுவன் சிறுவர்களை கொல்லாதீர்கள் என்ற அட்டையை தனது சட்டையில் குற்றியபடி இருந்தான். இதைவிடவும் பாலஸ்தீனத்தை அங்கிகரி என்றும் பட்டினியால் வாடும் மூன்றாம் உலக நாடுகளுக்கு குண்டுகளுக்கு பதில் உணவளிக்கும் படியும் பல கோஷங்கள் எழுப்பப்பட்டது.

நூற்றுக்கணக்கான அமைப்புகள் பங்கு கொண்ட இந்த ஊர்வலத்தில் உரிமைகள் பறிக்கப்பட்டு புலம்பெயர்ந்த வாழும் தமிழ் மக்களின் அமைப்புகள் எதுவும் பங்குகொண்டதாக தெரியவில்லை. நூற்றுக் கணக்காண பொலிஸார் இப்பேரணியை முன்னிட்டு காவலில் ஈடுபட்டு இருந்தனர். ஆனால் எந்த சம்பாவிதங்களும் நடைபெறவில்லை.



பேரணியில் கலந்துகொண்டவர்களின் ஒரு பகுதி

**Jakarta**
Restaurant
Tel: 020 8205 3335/3227
Open from 12.00 Noon DAILY
Express Lunch
£3.90 until 6pm
3 Course Set LUNCH
£5.95

7 Sheaveshill Parade, Sheaveshill Avenue, Colindale, London NW9 6RS

**Yogi Ji's**
THE FINEST VEGETARIAN
Egg Free
Cakes
Ready in 1 Hour
658 Kingsbury Road, Kingsbury, London NW9 9HN
Tel: 020 8204 6208

**C & S**
DISCOUNT STORE
BABY AND CHILDRENS' WEAR SPECIALISTS
C&S சவுத்தோல், கிங்ஸ்பரி
FOR WEDDINGS, Parties or Child First Birthday
Remember only one name C & S Discount Store
Winter woolys available in C&S of Southall & Kingsbury branch
£ 7.99
£19.99
£ 20.99
£ 9.99
£ 4.99
£ 29.99
£ 9.99
At very reasonable price Hall for Hire
Good facility near Alperton
TEL: 020 8903 6563
Fixed prices Best Prices
714-716 Kenton Road, Kingsbury, Harrow HA3 9QX
109-111 The Broadway Southall Middx UB1 1LN
Open Mon-Sun 10.00am 6.00pm
(Kingsbury closed on Sundays)
SALE SALE SALE

**Prabas பிரபாஸ்**
Tel: 020 8550 4566
Gantshill, Newbury park, Redbridge, Chigwell, Clayhall
மற்றும் அதனை அண்டி வாழும் தமிழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி!
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்! பிரபாஸ்
உங்கள் வீட்டுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள்,
மீன் வகைகள், இலங்கை-இந்திய மறக்கறி வகைகள்,
அத்துடன் தமிழ், ஹிந்தி, மலையாள, ஆங்கில திரைப்படங்கள்,
சிடிக்கள் அனைத்தும் வாடகைக்கும் விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம்!
PHONECARDக்கு - 20% விலைக்கழிவு உண்டு
CINE ZOOM VIDEO MAKERS &
CINE STYLE STILL PHOTOGRAPHERS
சினி ஸூம் வீடியோ மேக்கர்ஸ்
உங்களின் மங்களகரமான வைபவங்கள், நாட்டிய அரங்கேற்றம், நாடகங்கள், டீ.வி தொடர்கள்
மற்றும் இசை நிகழ்ச்சிகள் போன்ற அனைத்து தேவைகளுக்கும்
புதிய Digital Graphic Computerised நுட்பங்களை பயன்படுத்தி
சினிமா துறையில் அனுபவம் கொண்டவர்களால்
உங்கள் வீடியோ படம், நிழல்படம் எடுத்து தரப்படும்.
For a demonstration please visit/call
32 Woodford Ave, Gantshill, Ilford, Essex IG2 6XQ
020 8551 4153
07904323538
07949 240265

**PRIYA 3 & VANNIAN RESTAURANT**
SRILANKAN AND SOUTH INDIAN CUISINE
பிரியா வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி
பிரியா 2 யாழ் ஆக இயங்கிவரும் நமது ஸ்தாபனம் அநேக சுவைப்பிரியர்கள் தேவை அறிந்து சேவை செய்ய வந்துள்ளாள்
பிரியா 3 வன்னியன்,
433, High Street North, Manor Park E12 6TJ
Tel: 020 8470 2727
PRIYA 2 & YAAL RESTAURANT
404 Barking Road E6
Tel: 020 8471 6744 / 7319
PARTY ORDERS WELCOME (SPECIAL RATE APPLY)
SRI LANKAN & SOUTH INDIAN CUISINE
பிரியமுடன் பிரியாவின் அழைப்பு

**Palm Beach**
Fully Licensed
Finest Sri Lankan & South Indian Cuisine
Vegetarian and Non-vegetarian
Open 12.00 noon to 3.00 pm and 6.00 pm to midnight
10% Discount on PARTY ORDERS & EAT-IN over £50
17 Ealing Road Wembley Middx.
Tel: 020 8900-8664 / 07939 587 338

# சமாதானத்துக்கான நோபல் பரிசு


இவ்வாண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு ஐ நா செயலாளர் நாயகம் கொபி அனனுக்கு க்கும் ஐ நாவுக்கும் வழங்கப்பட்டு இருக்கிறது. கானாவை சேர்ந்த 63 வயதான கொபி அனன் 1997ல் செயலாளர் நாயகமாக தெரிவு செய்யப்பட்டார். ஐக்கிய நாடுகள் சபையும் கொபி அனனும் சர்வதேச சமூகத்துக்கு மூன்றாம் உலகின் வறுமையைப் பற்றிய உணர்வை ஊட்டியததும், மனித உரிமைகளுக்காக போராடியதும், எயிட்ஸ் நோயாளிகளுக்காக குரல கொடுத்ததும் குறிப்பிடத்தக்கது. கிழக்கு தீமோருக்கு சுயநிர்ணய உரிமையை பெற்றுக் கொடுத்தமை மிகவும் பாராட்டப்பட்டது.

ஆனால் ருவாண்டா, சோமாலியா, சியரலியோன் ஆகிய நாடுகளில் ஐ நா வெற்றிகரமாக செயற்படவில்லை. ருவாண்டாவிலும் பொஸ்னியாவிலும் இடம்பெற்ற இனப்படு கொலைகளில் ஐ நா வும் கொபி அனனும் பொறுப்புடன் செயற்படாமையால் பல இலட்சம் மக்கள் கொல்லப்பட காரணமாக இருந்தனர் என அப்படு கொலைகளில் இருந்து தப்பியவர்களின் அமைப்பு தெரிவிக்கிறது.



மேலே படத்தில் காணப்படுபவர் ஐ. நா. சபையின் செயலாளர், கொபி அனன்

# இஸ்லாமிய காலனித்துவம்-வி எஸ் நய்போல்



பிரபல நாவலாசிரியரும் சர்ச்சைக்குரியவருமான வி எஸ் நய்போல் இஸ்லாம் மதம் காலனித்துவ சிந்தனையுடன் செயற்படுவதாக குற்றம்சாட்டி உள்ளார். ஒக்ரொபர் 11ம் திகதி இலக்கியத்துக்கான நோபல் பரிசை வென்ற இவர் அதற்கு சில தினங்களுக்கு முன்னரேயே இந்த கருத்தை தெரிவித்து இருந்தார். ஒருவர் முஸ்லீமாக மாற்றப்படுவதற்கு அவர் தனது கடந்த காலத்தையும் வரலாற்றையும் மறக்க வேண்டும். தனது மூதாதையர் கலாச்சாரம் இருந்திருக்கவில்லை என்றும் அது ஒரு பிரச்சனை அல்ல என்றும் எண்ணி தனது புதிய மாற்றத்தை பூரணமாக ஏற்று கொள்ள வற்புறுத்தப்படவதாக நய்போல் இஸ்லாமிய காலனித்துவத்தை குறிப்பிடுகிறார்.

69 வயதான ரிறினிடாட்டை சேர்ந்த இலண்டனில் வாழும் இவர் இந்திய மூதாதையரை கொண்ட இந்து ஆவர். இந்திய மூதாதையர் பற்றி பெருமைப்படும் இவரின் இஸ்லாம் பற்றிய விளக்கம் இவரது தீவிர இந்து அடிப்படை வாதத்தில் இருந்து உருவானது என இஸ்லாமிய அமைப்பொன்று தெரிவித்து இருக்கிறது.

# தமிழ்ப் பெண் தாக்கப்பட்டார்

ஒக்ரோபர் 11ம் திகதி இலண்டனில் தமிழ்ப் பெண் ஒருவர் தாக்கப்பட்டார். தலைநகரில் மிகவும் சனநடமாட்டம் அதிகமான படிங்ரன் பகுதியில் வைத்தே இவர் தாக்கப்பட்டு உள்ளார். படிங்ரனில் பணமாற்று சேவை நிலையத்தை நடாத்தி வரும் பெண்ணே இந்த தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளார். வியாழக் கிழமை காலை நிலையத்தை திறந்து உள்ளே செல்ல முயற்சித்த போது தாக்குதல் நடத்தப்பட்டது. அதிஸ்டவசமாக அவருக்கு பெரும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

* *


Web Design
Internet, Telematics & PC Maintenance
FREE Subject to registration fee
New Courses
Flexible hours
Monday to Saturday, 3 sessions per day
A choice of morning, afternoon or evening



'IT is the key to your future'
Friendly Supportive Staff!
Call us on: 020 8202 4646 020 8457 4848
Limited places available Book Now!
North London ITeC
Hitech House
193 The Broadway
West Hendon
London NW9 7DD
In partnership with Oaklands College



SSGS SCHOOL OF COMPUTERS
கம்பியூட்டர் பாடசாலை
Offering courses designed to your need
Flexible syllabus, Flexible timings
May be you will have a surprise with us
For details contact
SSGS LTD.
416 BARKING ROAD, LONDON E6 2SA
TEL: 020 85524078 or 85521211



PRINT TONE design to print
- WEDDING CARDS
- LEAFLETS
- POSTERS
- BUSINESS CARDS
- LETTERHEADS
- BROCHURES

For all your printing needs
Contact: AMALAN
Tel/Fax: 020 8520 3702
Mobile: 07956 37 55 26
E-mail: a.printone@btinternet.com



உதயன் வரி விளம்பரங்களுக்கு
020 8952 5677



Sri-Raja-Sri
GAYATHRI MATHA
THIRUSSTHALHAM
CALL
020 8905 7775



உதயனில் வெளிவரும் விளம்பரங்களுக்கு பத்திரிக்கை பொறுப்பேற்காது



IF TECH
273 Edgware Road,
Colindale, NW9 6NB
020 8205 1060
info@if-tech.com
FREE & (upto 80%) DISCOUNTED COMPUTER COURSES
EASY PAYMENT TERMS AVAILABLE
Special Beginners Class, PC Assembly, Web Development, Java Script, VB, Word, Excel, MCSE, A+, Networking Admin., CAD, Advanced Word, Excel and Access....
Small classes and friendly personalised tution.
Ages 19-90 welcome
Phone or pop in for details
(All offers subject to eligibility under ILA & IF-Tech Terms)



PARTY INVITATION
SPECIALISTS IN PARTY PRODUCTS FOR ALL OCCASIONS
WEDDING DECORATIONS; CONTEMPORAY
BIG DISCOUNTS ON FIREWORKS
10% DISCOUNTS WITH THIS ADVERTISEMENT
10% விலைக் கழிவுகள் உண்டு
இவ்விளம்பரத்தை கொண்டு வருவோருக்கு
CALL NOW
FOR THE A-Z OF PARTY PRODUCTS COME TO
171/173 HIGHSTREET NORTH, EASTHAM, E6 1JB
TEL 020 8471 9777



FUNTASIA
The Party Shop



BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
PARTY WARE & NOVELTIES
BRIDAL FAVOURS
SOFT TOYS
FANCY DRESS, WIGS, MASKS
JOKES & MAKE-UP
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS
AND BOOK MATCHES.
RUBBER STAMPS SERVICES
சகலவிதமான வைபவங்களுக்கும் தேவையான அலங்கார சோடனைகளுக்கு நாடுங்கள் Fantasia
229 KENTON ROAD, KENTON, HARROW, MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333 www.FuntasiaWorld.com



FREE IT TRAINING
GET AN IT QUALIFICATION -
FREE TUITION
MS OFFICE SKILLS AND MORE!!
DfEE SPONSORED ILA PROGRAMMES!!
(Employed, Unemployed, Retired, Self-employed)
Call Tel: 020 8682 0150
London College of Computing (SW)
105 Upper Tooting Road, London SW17 7TW


"The UDHAYAN" Published by [Global News Media] GNM (PVT) LTD. in London at, I Floor 25-27 High Street Edgware, Middx. HA8 7EE U.K. Tel: 020 8 905 7775 Fax: 020 8952 5677 email: editor@udhayan.co.uk

# 51 தமிழ் காடையர் குழு உறுப்பினர்கள் கைது

## மகிழ்ச்சியில் கனடிய தமிழ்ச் சமூகம்

ஒக்ரோபர் 19ம் திகதி கனடிய பொலிஸார் தமிழ் காடையர் குழுக்களுக்கு எதிராக எதிர்பாராத நடவடிக்கையில் இறங்கியது. இந்த அதிரடி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு 24 மணிநேரத்துக்குள் எ கெ கண்ணன், விவிரி காடையர் குழுக்களை சேர்ந்த 51 காடையர்கள் கைது செய்யப்பட்டனர். பல கிரிமினல் குற்றங்களும் குடிவரவு சட்டங்கைளை மீறியதும் இவர்களது கைதுக்கு காரணமாக இருந்து உள்ளது. மேலும் ஒன்பது பேருக்கு கைது ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. கைது செய்யப்பட்ட 51 பேரில் காடையர் குழுக்களின் தலைவர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது முதற் தடவையாக காவல்துறையின் காடையர் குழுக்களை திட்டமிட்ட குற்றமாக (Organised crime) கருத ஆரம்பித்து உள்ளார்கள். கைது செய்யப்பட்டவர்கள் திட்டமிட்ட குற்றங்கள் சட்டத்தின் கீழும் குடிவரவு சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டார்கள். அதிகாலை நான்கு மணிக்கு ரொறன்ரோ, ஒட்டாவா, குள்பத் ஆகிய பகுதிகளில் உள்ள காடையர் என அடையாளம் காணப்பட்டவர்களின் வீடுகளுக்கு 400 பொலிஸார் புகுந்து 51 பேரை கைது செய்தனர்.

இக்காடையர்கள் கைது செய்யப்பட்ட செய்தி சில மணிநேரத்திற்குள்ளேயே கனடிய தமிழர் மத்தியில் பரவியது. இச்செய்தியை தொடர்ந்து தமிர்கள் பலரும் தமது மகிழ்ச்சியை தெரிவித்து உள்ளனர். மிகச் சிறு உறுப்பினர்களை கொண்ட இக்காடையர் குழுக்கள் 200,000 தமிழர்களின் அமைதியான வாழ்வை கெடுத்து வந்ததுடன் அவர்கள் மத்தியில் பெரும் பீதியையும் ஏற்படுத்தினர். நீண்டகாலமாக கனடிய பொலிஸார் இக்காடையர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என குற்றம்சாட்டி வந்த தமிழர்கள் இந்த அதிரடி நடவடிக்கையை பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்று உள்ளனர்.

கடந்த ஒக்ரோபரில் இந்த கடையர் குழுக்களின் மோதலில் சம்பந்தமில்லாமல் சுட்டுக் கொல்லப்பட்ட செல்வராஜாவின் மகனின் (17) ஓராண்டு அஞ்சலி நடந்து கொண்டு இருக்கும் போது இக்கைது பற்றிய செய்தி அவருக்கு தெரிவிக்கப்பட்டது. அங்கு கூடியிருந்த 150 பேருக்கும் அச்செய்தி ஆறுதல் அளித்தது. ஆனால் கைது செய்யப்பட்டவர்கள் சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து சட்டத்தின் ஓட்டைகளை பயன்படுத்தி இக்குற்றவாளிகள் தப்பிக் கொள்வார்களோ என்ற பயமும் நலவுகிறது. கைது செய்யப்பட்ட பெரும்பாலானோர்க்கு பிணை மறுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இக்கைதுகளை தொடர்ந்து எ கெ கண்ணன், விவிரி காடையர் குழுக்கள் சிதறிப் போகும் என பொலிஸ் அதிகாரி யூலியன் பன்ரினோ தெரிவித்தார். கைது செய்யப்பட்டவர்களில் எ கெ கண்ணன் குழுவின் தலவனான ஜோதிரவி சிற்றம்பலம் (31), விவிரி குழுவின் தலைவர்களில் ஒருவனான கைலாஸ் தனபாலசிங்கம், விவிரி குழுவுக்கு நெருக்கமான சீலப்பு எனப்படும் ஜெயசீலன் துரைசிங்கம் ஆகியோர் அடங்குவர். ஜெயசீலனே சீலப்பு குழுவை தனது பெயரிலேயே ஆரம்பித்தான். தான் தற்போது குழுவை விட்டு விலகி நகருக்கு வெளியே வாழ்வதாக பேட்டி ஒன்றில் தெரிவித்து இருந்தான்.

விவிரி குழு தொண்ணூறுக்களின் முற் பகுதியில் வல்வெட்டிதுறையை சேர்ந்தவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு சற்று பின் கனடாவுக்கு வந்த ஜோதிரவி 1992ல் எ கெ கண்ணன் குழுவை ஆரம்பித்தான். தெருப் பெயரான கண்ணன் எ கெ 47 மீது இருந்த ஆர்வத்தால் அக்குழு எ கெ கண்ணன் என அழைக்கப்பட்டது. கண்ணன் மீது இரு கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. ஏப்ரலில் கண்ணனது கார் சுற்றி வளைக்கப்பட்டு துப்பாக்கி பிரயொகம் நடத்தப்பட்டது. ஆனால் கண்ணன் சிறு காயத்துடன் தப்பினான். அதன்பின் செப்ரம்பரில் ஸ்காபறோவில் உள்ள தனது விட்டுக்கு வாடகைக் காரில் சென்று கொண்டு இருக்கும் போதும் துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டது. இரண்டில் இருந்தும் தப்பிக் கொண்டான்.

கைது செய்யப்பட்ட மற்றுமொருவனான பூனை என்று அழைக்கப்படும் பஞ்சலிங்கம் நாகலிங்கம் (28) மரணத்துக்கு பல தடவை சவால் விட்டதாக காவல்துறையினர் குறிப்பிடுகின்றனர். கடந்த டிசம்பரில் இவன் மீது வைக்கப்பட்ட குறி இவனது குழந்தைக்கு ஆபத்தாக அமைய இருந்தது. அச்சம்பவத்தில் குழந்தை மயிரிழையில் உயிர் தப்பியது. அதன் பினன் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தனது குடும்பத்தை விட்டுவிட்டு தன்னுடன்


இறையருள் அரசி அன்னை காயத்ரி

வேதனைகள் தீர்க்க வல்லவர், குறைகளை போக்கிட வல்லவர் இறையருள் அரசி அன்னை காயத்ரி.



உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பினி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும், உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள் **020 8952 7775**


உதயன்
அவசர
செய்திப்
பிரிவு
தொடர்புகளுக்கு
+4420
8905
7775






EDITOR: Dr T RAVIKUMAR   Chief Reporter: T.JEYABALAN   Advertising Manager: T. PUSHPALINGHAM   FREELY Circulated throughout UK, FRANCE & GERMANY

# தமிழ் குறும் மற்றும் விவரணப் படங்கள் கோடம்பாக்கத்துக்கு அப்பால் தமிழ் சினிமா

Curzon Cenima - Soho, End Cenima - Walthamstow திரை அரங்குகளில் தொடர்ச்சியாக ஒருவாரத்துக்கு தமிழ் திரைப்படங்கள் திரையிடப்படுகிறது. ஒக்ரோபர் 26ம் திகதி முதல் நவம்பர் 1ம் திகதிவரை 52 குறும் மற்றும் விவரணப்படங்கள் திரையிடப்பட இருப்பதாக இலண்டன் சினிசங்கத்தினர் உதயனுக்கு தெரிவித்து உள்ளனர். முதன் முறையாக இடம்பெறும் உலகத் தமிழர் குறுந்திரைப்பட விழா இது என இவ்விழா ஒழுங்கமைப்பாளர் யமுனா ராஜேந்திரன் தெரிவித்தார். பரந்து பட்ட பார்வையாளர்களை எட்டவும் விரிந்த நிலையில் உலகளவிலான தாக்கங்களை உருவாக்கவுமான நோக்கம் கொண்டே இத்திரைப்பட விழா ஒழுங்கு செய்யப்பட்டதாக இலண்டன் சினிசங்கம் தெரிவிக்கிறது. ( திரைப்பட விழா பற்றிய மேலதிக விபரங்களுக்கு இவ்விலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் 020 8507 9710)

• காதலுக்கு அப்பால் வளரமுடியாது இருக்க்கும் கோடம்பாக்கம் சினிமாவுக்கு வெளியே பல நல்ல தமிழ் விவரண மற்றும் குறும் படங்கள் வந்து வெளிவந்து உள்ளது. அகதி வாழ்வு, அந்நிய மண்ணில் இனப்பாரபட்சத்துக்கு உள்ளாகும் தமிழர்கள், பெண்களின் நிலையில் புலம்பெயர் வாழ்வு என இப்பட்டியல் நீள்கிறது. கிட்டத்தட்ட பிரதான தமிழ் சினிமா நீரோட்டத்தால் கவனிக்கப்படாத ஒரு அம்சமாக இருந்து வரும் அகதிகள் பிரச்சனையும் புலம்பெயர் வாழ்வையும் ஜீவன், ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் போன்றோர் திரையில் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

தமிழகத்தில் காணப்படும் சமூகப் பிரச்சனைகளான குழந்தைத் தொழிலாளர், சிசுக்கொலை, தலித் மக்கள் மீதான வன்முறை, பலாத்கார திருமணங்கள், வேலை பார்க்கும் பெண்கள் குழந்தைவளர்ப்பில் எதிர்நோக்கும் பிரச்சனைகள், முளைத்து வரும் திடிர் கடவுள்கள் பற்றிய மூடப் பிரச்சனை, தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் மதவாதம், ஊழல் என பல்வேறு சமூக பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் வெளிப்படுத்தும் பல திரைப்படங்கள் வெளிவந்து உள்ளது. ஆர் ஆர் சீனிவாசன், ஜோ, சிவகுமார், ரகுராம், பிலெனின், சொர்ணவேல், அருண்மொழி, விஜய் சேகர், எ எஸ் பத்மாவதி, ஜனனி , தமயந்தி, மினி □ரி, தாஸ் ஆகியோர் தமிழகத்தின் சமூகப் பிரச்சனைகளை சினிமாவாக்கி உள்ளனர்.

தங்கம், ஊருக்கு நூறு பேர், நிழல் யுத்தம், யாத்திரை, எச்சில் போர்வை ............... என 52 படங்கள் திரையிடப்பட உள்ளது. தமிழ் வாழ்விலும் கலாச்சாரத்திலும் அக்கறை கொண்ட அனைவரையும் சினிசங்கம் அன்பு கனிந்து வரவேற்கின்றது. இப்படியான விழாக்களில் பங்கு கொண்டு ஊக்கப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் பலராலும் உணரப்பட்டு வருகிறது. மேலும் பிரித்தானியாவில் வாழும் அடுத்த தலைமுறையினரும் வளங்கிக்கொள்ளும் வகையில் ஆங்கில விளக்கமும் அளிக்கப்பட்டு உள்ளது.

**WEMBLEY GREETING CARDS LIMITED**
(CASH & CARRY)
WCC
WHOLESALERS OF GREETING CARDS, STATIONERY & TOYS
உங்களின் பிறந்த தினமா. திருமண நாளா. மற்றும் ஏனைய் வைபவங்களுக்கும் தேவையான அனைத்துப் பொருட்களுக்கும். மலிவாக. தரமாகப் பெற்றிட ஒரேயிடம்.
*Plastic cutlery, Plates, Bowls, Spoons, also party/weddings decoration*
Open from Monday to Friday - 10a.m to 8p.m Saturday Closed Sunday - 10 a.m to2 p.m
WEMBLEY STADIUM INDUSTRIAL ESTATE
FIRST WAY WEMBLEY MIDDLESEX HA9 0TU
Tel: 020 8903 8990
Fax:020 8903 5812

**உதயன்**
அவசர
செய்திப்
பிரிவு
தொடர்புகளுக்கு
+4420
8905 7775

## 3ம் பக்க தொடர்ச்சி...

மோதிப்பார்க்கும் படி சவால்விட்டான். கடந்த மார்ச்சில் தடப்பு முகாமில் இருந்து தண்டனை முடிந்த வந்து கொண்டு இருந்தபோதும் இவன் மீது 6 தடவை துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கோழி என அழைக்கப்படும் விவிரி குழுவின் முக்கிய புள்ளிகளில் ஒருவனான சுரேஸ் கனகலிங்கமும் கைது செய்யப்பட்டான். இவன் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு ஆதரங்கள் போதாமையால் சென்றமாதம் குற்றச்சாட்டு கைவிடப்பட்டது.

1980களின் நடப்பகுதியில் கனடாவுக்கு தனியாகவோ குடும்பமாகவோ புலம்பெயர்ந்த இந்த காடையர்கள் அங்குள்ள மக்களை தமது கொடி செயல்களால் பீதிக்கு உட்படுத்தி வாழ்ந்தனர். ஒரு குழுவை விட மற்றைய குழு கொடியது என்ற தோற்றத்தை ஏட்டிக்கு போட்டியாக மிருகத்தனமான தாக்குதல்களால் நிஜப்படுத்தினர். நவீன சுடும் ஆயுதங்கள் முதல் பொல்லுகள், வாள்கள் என பலவற்றை தமது மிருகத்தனங்களுக்கு பயன்படுத்தி உள்ளனர்.



தொடர் கொலையாலிகள். இடமிருந்து வலமாக : ஜெயசீலன் துரைசிங்கம், பஞ்சலிங்கம் நாகலிங்கம், ஜோதிரவி சிற்றம்பலம்

**TRICO SHIPPING WORLDWIDE**
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM BOMBAY - CHENNAI
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT 4 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD, GREENWOOD, LONDON N22 6XJ

**Perma Freight Services Ltd.**
THE PIONEER SRIlankan shipping company
PERMA FREIGHT SERVICES
ESTABLISHED IN 1966
* IMPORT & EXPORT
* FREIGHT FORWARDING
* CUSTOMS CLEARING
* TRAVEL AGENTS
* STORAGE
* REMOVAL
* IN HOUSE PACKING
Shipping to SriLanka, India, Pakistan, Bangladesh, Europe, USA, Canada, Australia, Far East and many more worldwide destination
Call us for professional service at highly Competitive Rates for SriLanka-India and Pakistan
Special Door to Door Service to Colombo
For more details, Call us now on:
Tel:020 8459 6633
Fax: 020 8459 6455
இது ஒரு தமிழரின் முதல் நிர்வாகம்
எம்மை நாடுங்கள். உங்கள் தேவைக்கேற்ப எம்மால் செயல்பட முடியும்.
உங்களுக்கு சிரமமின்றி வீட்டுக்கு வீடு வந்து சேவை செய்பவர்கள் நாமே.
அனைத்து உலக நாடுகளுக்கும் பொருட்கள் அனுப்ப வேண்டிய தேவையினை எம்மால் ஒருமித்து செய்துதர முடியும்.
எங்களின் சேவையை. உற்றார் உறவினர் சிரமமின்றி தங்கள் வீட்டினிலே பெற்றிடலாம்.
கொழும்பு சுங்க இலாகா தடைகளின்றி பொருட்கள் யாவற்றையும் பெற்றிடலாம்.
e-mail: INFO@permaservice.com

we welcome NEWS REPORTING. UDHAYAN specialises in INVESTIGATION JOURNALISM. Please report incidences happening in YOUR AREA, confidentiality assured.

# தஞ்சம் கோருவோரை பாதுகாக்கவும் இனவாதிகளுக்கு எதிராக போராடவும் சட்டம்

பயங்கரவாதிகளுக்கு எதிரான யுத்தத்தை தொடர்ந்து பிரித்தானியாவில் தஞ்சம் கோருவோர் மீதான விஷமத்தனங்கள் அதிகரித்து இருக்கிறது. பொறுப்பற்ற ஊடகங்கள் குறிப்பாக வலதுசாரி ஊடகங்கள் ஒரு சில பயங்கரவாதிகள் தஞ்சம் கோரியவர்களாக இருப்பதை வைத்து தஞ்சம் கோருவோரை கட்டுப்படுத்த வேண்டும் என்ற வகையில் செய்திகளை வெளியிடுகின்றன. மேலும் பயங்கரவாதிகளுக்கு எதிரான யுத்தம் மக்களின் அடிப்படை உரிமைகள் சிலவற்றையும் பறிக்கின்றது.

ஏற்கனவே மிகவும் இறுக்கமாக உள்ள குடிவரவு விதிமுறைகள் 2000 ஆண்டு பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் மேலும் இறுக்கமடைந்தது. தற்போது பயங்கரவாதிகளுக்கு எதிரான யுத்தம் அவ்விதிமுறைகளை மேலும் இறுக்குகிறது. இப்புதிய இறுக்கங்கள் அனைத்தும் அகதிகளுக்கான 1951ம் ஆண்டு ஜெனிவா உடன்பாட்டை மெலினப்படுத்துவதாக அமைகின்றது.

தஞ்சம் கோருவோரை பாதுகாக்கவும் இனவாதிகளுக்கு எதிராக போராடவும் நவம்பர் 3ம் திகதி உள்ளூரில் உள்ள உள்ளாட்சி மன்றங்களிலும், சுப்பர்மாக்கட்களிலும், தடுப்பு முகாம்களிலும் கூடி ஆதரவளிக்கும் படி தஞ்சம் கோருவோரை பாதுகாக்கும் அமைப்பு, அடிப்படை உரிமைகளுக்கான தேசிய அமைப்பு, திருப்பி அனுப்பப்படுவதற்கு எதிரான தேசிய கூட்டமைப்பு என்பன கேட்டுள்ளன.

# கட்சி மாநாட்டில் சிங்கள அமைப்புகள் கோஷம்

லிபிரல் மற்றும் தொழிற்கட்சி மாநாட்டில் சிங்கள அமைப்புகள் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என கூறி கோஷமிட்டு உள்ளனர். அடிப்படை உரிமைகளுக்காக நீண்ட காலம் குரல் கொடுத்துவரும் லிபிரல் டெமொகிரட் கட்சி பா உ சைமன் ெக்குக்கு எதிராகவும் அக்கட்சியின் மாநாட்டில் கோஷமிட்டனர். National Movements Against Terrorism and Shingala Urumaya, the Sinhale Foundation, Buddhist Village Trust for Sri Lanka and Human Rights for Victims of Terrorism ஆகிய அமைப்புகள் கலந்து கொணடன. அவர்கள் "Simon Hughes supports Tamil terrorism", "Tamil Tigers pioneers of suicide terrorism," and "Tamil terrorists linked to Bin Laden terror group" அட்டைகளை தாங்கிய படி கோஷமிட்டனர். பிறைற்றனில் இடம் பெற்ற தொழிற்கட்சி மாநாட்டில் சிங்கள அமைப்புகளின் கூட்டமைப்பு பிரதமர் ரொனி பிளயருக்கு விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கொடுமைகளை வரிசைப்படுத்தி மகஜர் ஒன்னை கையளித்து உள்ளனர். அமைப்பின் தலைவர் ஆர் கெ விமலசேகர புலிப் பயங்கரவாதத்தை அழிக்க பிரித்தானிய அரசு உதவவேண்டும் என்று கேட்டு இருந்தார்.

# வெவ்வேறு வழக்குகளில் இளைஞர்களுக்கு மூன்று ஆண்டுகளும், அறு மாதங்களும் சிறை

அஸ்போர்ட் கென்ற் பகுதியில் வசித்த இரு இளைஞர்கள் இரு வேறு பாலியல் வழக்குகளில் குற்றவாளிகளாக கணிக்கப்பட்டு உள்ளனர். செப்ரம்பரில் இவர்களுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ்விருவரும் பாதிக்கப்பட்ட பெண்களுடன் தரக்குறைவாக நடந்து கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. ஒருவருக்கு மூன்று ஆண்டுகளும் மற்றயவருக்கு ஆறு மாதங்களும் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.

இவ்விரு இளைஞர்களுமே தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஆரம்பத்தில் நிராகரித்து இருந்தனர். ஆனால் மூன்று ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்ட 21 வயது இளைஞரின் தஞ்ச வழக்கு நிராகரிக்கப்பட்டு இருந்ததாகவும் அதனால் அவர் தண்டனை முடிந்தவுடன் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படலாம் எனவும் அரசதரப்பு வாதிகளால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர் குற்றத்தை ஒத்துக் கொண்டால் அவரது வழக்கு விபரங்கள் உள்துறை அமைச்சுக்கு வழங்கப்படாது என அரச தரப்பு வாதிகளால் உறுதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து குற்றத்தை குற்றம் சாட்டப்பட்ட இளைஞர் ஏற்றுக் கொண்டார் என அவரை சிறையில் சந்தித்த அவரது நண்பர் தெரிவித்தார்.

மிக அண்மையில் பிரித்தானியாவுக்கு வந்த மற்றைய இளைஞருக்கு 6 மாத சிறை அளிக்கப்பட்டு இருக்கிறது. பெல்த்தம் குடிவரவு நீதிமன்றத்துக்கு தனது தஞ்ச வழக்கு தொடர்பாக சென்றுவிட்டு திரும்புகையிலேயே இச்சம்பவம் இடம்பெற்று உள்ளது. ரெயில் நிலையத்தில் வைத்து இளம் பெண்ணொருத்தியுடன் தகாத முறையில் நடந்து கொண்டதாக அவ்விளைஞர் மீது குற்றம் சாட்டப்பட்டது. ஆங்கில மொழியில் பரீட்சயம் இல்லாத இவ்விளைஞர் அப்படி நடந்து கொண்டிருக்க கூடியவர் அல்ல என அவருடைய நண்பர்கள் நம்புகின்றனர்.

இலண்டனுக்கு வெளியே சிதறி வாழும் தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்ய எந்த அமைப்புகளும் இல்லாததால் அவர்கள் தன்னந்தனியாக பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டி இருப்பதாக இலண்டனுக்கு வெளியே வாழும் அரசியல் தஞ்சம் கோரிய தமிழர்கள் தெரிவிக்கின்றனர்.

# பிரித்தானிய சிறுபான்மை இனங்கள் வேகமாக வளர்கின்றன

பிரித்தானியாவில் உள்ள சிறுபான்மை இனங்கள் மிக வேகமாக வளர்ந்து வருவதாக பிரித்தானிய புள்ளிவிபர அலுவலக மதிப்பீடு தெரிவிக்கிறது. 1992-1994 காலப்பகுதியிலும் 1997-1999 காலப்பகுதியிலும் ஏற்பட்ட சனத்தொகை மாற்றத்தை வைத்தே இம்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இக்கணிப்பின் படி பெரும்பான்மை சமூகத்தின் சனத்தொகை ஒரு வீதத்தால் அதிகரிக்க இங்கு வாழும் சிறுபான்மை இனங்களின் சனத்தொகை சராசரியாக 15 வீதத்தால் அதிகரித்து இருக்கிறது. குறிப்பாக தென்னாசியர்களின் சனத்தொகையே வேகமாக அதிகரித்து வருகிறது.

ஆபிரிக்க கறுப்பர்களின் வளர்ச்சி 37% ஆகவும் பங்களாதேசியர்களின் வளர்ச்சி 30% ஆகவும் பாகிஸ்தானியர்களின் வளர்ச்சி 13% ஆகவும் சீனர்களின் வளர்ச்சி 5% ஆகவும் இந்தியர்களின் வளர்ச்சி 4% ஆகவும் ஏனைய ஆசியர்களின் வளர்ச்சி 27% ஆகவும் காணப்படுகிறது. பிரித்தானிய சிறுபான்மை இனங்களில் 50 வீதத்தினர் தலைநகர் இலண்டனிலேயே வாழ்கின்றனர்.

மேற்படி காலப்பகுதியில் மொத்த வெள்ளை இனத்தவர்களின் சனத்தொகை அதிகரிப்பை காட்டிலும் சிறுபான்மை இனங்களின் சனத்தொகை அதிகரிப்பு சற்றே அதிகமாக உள்ளது. வெள்ளை இனத்தவர்களின் சனத்தொகை 450,000 ஆல் அதிகரிக்க சிறுபான்மை இனங்களின் சனத்தொகை 500,000 ஆல் அதிகரித்து இருக்கிறது. சிறுபான்மையினரின் சனத்தொகை 1992-1994 காலப்பகுதியில் 5.7%ல் இருந்து 7.1% ஆக கடந்த ஆண்டு அதிகரித்து இருக்கிறது.

**பிரித்தானியாவில் தென்னாசியர்களின் மக்கள் தொகை**

இந்தியர்கள் - 984,000
(இந்திய மூலம் உடையவர்கள் அடங்கலாக)
பாகிஸ்தானியர்கள் - 675,000
பங்களாதேசியர்கள் - 257,000

இலங்கையர்களின் சனத்தொகை பற்றிய தெளிவான புள்ளி விபரங்கள் பதிவு செய்யப்படவில்லை. இலங்கைத் தமிழர்கள் 100,000 வரை பிரித்தானியாவில் வாழ்கிறார்கள் என மதிப்பிடப்படுகிறது. தமிழர்கள் தமது இன அடையாளத்தை தெளிவாக குறிப்பிட்டு காட்ட வேண்டும். அதன் மூலமே தமிழர்கள் தனித்தன்மையான இனமாக கணிக்கப்படும்.

# மது போதையில் விபத்து

ரூற்றிங் மதுவிடுதியில் மது அருந்தி விட்டு வந்த இளைஞர் காரில் இருந்து வீழ்ந்து பலத்த காயத்துக்கு உள்ளானார். செப்ரம்பர் முற்பகுதியில் ரூற்றிங் முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றது. சம்பவத்தை தொடர்ந்து ஆலயம் உட்பட பொலிஸார் அப்பகுதியை தடை செய்து இருந்தனர். ஆரம்பத்தில் போதையில் இருந்த இளைஞர்கள் தமக்குள் மோதிக் கொண்டதாகவே பொலிஸார் சந்தேகப்பட்டனர். ஆனால் அதற்கான ஆதாரங்கள் காணப்படவில்லை.

இச்சம்பவத்தில் காயப்பட்ட இளைஞரின் நண்பர் உதயனுக்கு தகவல் தருகையில் இது ஓர் விபத்தே என தெரிவித்தார். அவர் சம்பவத்தை விபரிக்கும் போது மது அருந்திவிட்டு வெளியே வந்த நண்பர்கள் தமது காரில் ஏறிக்கொண்டனர். அப்போது அவர்களில் ஒருவர் மட்டும் கார் புட்டின் மேல் ஏறி இருந்தார். இவர் பின்னே இருப்பதை அவதானிக்காமல் காரை எடுத்த போது பூட்டில் ஏறி இருந்தவர் தலை அடிபட கீழே வீழ்ந்தார். தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளானவர் தற்போது தேறி வருகிறார்.

# பிரித்தானிய பா உ இலங்கையில்

வடக்கு இலண்டன் பாராளு மன்ற உறுப்பினர் பறிஹர்டினர் இலங்கைக்கு விஜயம் செய்து உள்ளார். தமிழ் மக்களின் தாயகக் கொள்கையின் அனுதாபியான இவர் விடுதலைப் புலிகளின் ஆனுதாபியாகவும் கணிக்கப்படுகிறார். இவரது இலங்கை விஜயம் இலங்கை பெரும்பான்மையின ஊடகங்களால் சந்தேகக் கண்ணுடன் பார்க்கப்படுகிறது.


**ADVANCE SHOPFITTERS LTD**

* Aluminium shop front shutters
* Glazing
* Signs
* Security doors
* Security grills
* Maintenance and repairs undertaken
* Free estimates in any area


We beat any price
(Low and competitive price)
எம்மால் குறைந்த விலையில் நிறைந்த சேவை செய்ய முடியும்

Call us on : 020 8597 8097
:07931 354 070 (Param)

Unit 1-D, Barking industrial park
Alfreds way, Barking
Essex IG1 OTJ

**SiGN FiT**
The Company of Dynamic Ideas.
Specialist in Illuminated, Non-Illuminated, Menu System & Menu Photos.
Challenge: We will beat any Price.
Best Deal Best Design Best Service
Tel:020 8552 1194
Fax:020 8548 1047 Mob:07956 274762
482 Barking Road, East Ham London E6 2LT

**HEATHROW KITCHENS**
QUALITY KITCHENS & BEDROOMS AT AFFORDABLE PRICES 020 8813 6952
Trade Accounts Welcome



140 UXBRIDGE ROAD, HAYES
FAX: 020 8581 1005
www.heathrowkitchens.co.uk
Guaranteed to beat any competitive quote

# பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம்

அமெரிக்கா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு உள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் இலங்கை போன்ற நாடுகளில் உள்ள பயங்கரவாதப் பிரச்சனையையும் சேர்த்து கொள்ள வேண்டும் என இலங்கையின் பெரும்பான்மையினப் பத்திரிகைகள் தமது ஆசிரியர் தலையங்கங்களில் எழுதி உள்ளன. இலங்கையில் கடந்த 20 ஆண்டுகளாக நடைபெறுவது உரிமைக்கான போராட்டம் என்பதையும் ஒவ்வொரு இலங்கைத் தமிழர்களும் தமது அன்புக்குரியவர்களையும் உடைமைகளையும் இழந்து உள்ளார்கள் என்பதை இப்பத்திரிகைகள் பிடிவாதமாக ஏற்கமறுக்கின்றன. மற்றுமோர் விமர்சகர் இன்னும் ஓர்படி மேலே சென்று விடுதலைப் புலிகளின் முஸ்லீம்களுக்கு எதிரான நடவடிக்கைகளால் அமெரிக்க அரசு அவர்களுக்கு எதிராக செயற்படாது என ஒக்ரோபர் 3ல், த சன்டே லீடர் பத்திரிகையில் ரோய் மெண்டிஸ் எழுதி உள்ளார்.


## JUST BEHIND SAFEWAY

A1 Auto Centres

We are currently giving **FREE WINTER CHECKS** to all our customers to ensure your safety.

This includes:
- tyres
- exhaust system
- anti-freeze level
- brakes/ brake fluid
- wipers
- oil level
- washer fluid

ELECTRONIC WHEEL ALIGNMENT CENTRE
Using the latest Hunter DSP-400 Infra-red wheel alignment system, we can give you a highly accurate wheel alignment reading. We also give you a before/ after printout to show the difference.

Pop in or give us a call on 020 8204 6868

Specialist in;

TYRES

ALLOYS

EXHAUSTS

SHOCKS

BATTERIES

BRAKES

FREE WINTER CHECKS

IRELLI BFGoodrich MICHELIN LASSA


**TEL: 020 8204 6868**

Unit 4 Bowmans Trading Estate Westmoreland Road London NW9 9RL



**C.B.MOTORS (BALA)**
ARCH NO 45
OFF ROXETH GREEN AVE
SOUTH HARROW
MIDDLESEX
HA2 8AA
TEL:020 8423 9984


PLEASE CALL BALA FOR AUTOMOTIVE NEEDS



BUYING AND SELLING ALL TYPE OF JAPANESE CARS (LESS THAN FIVE YEARS OLD)
LONG TERM CAR HIRE SERVICES ALSO AVALABLE FOR MINICAB DRIVERS
UNDERTAKING REPARES FOR VARIOUS CARS
SPECILISED IN BODY WORKS, AUTO ELECTRICAL WORKS, ACCIDENT REPAIRS, MOT ARRANGEMENTS ETC
AFRIENDLY GARAGE WITH VERY REASONABLE RATES



**T.N.MOTORS SERVICES**
THIRU2001@HOTMAIL.COM
SERVICING AND REPAIRS ALL MAKES AND MODELS
OPEN 9AM TO 6 PM MONDAY TO SATAURDAY
24HOURS VEHICLE RECOVERY SERVICE 07956 274 764 (THIRU)





WORKSHOP 1, REAR OF 36A GREEFFELL ROAD, MITCHAM SURREY CR4 2BY
TEL:020 8648 3458



**SUTHAN AUTOS**
24 HOURS BREAKDOWN SERVICE CALL ON 07949 219 211
*ALL TYPE OF REPAIR WORKS*
*JUST ONE CALL TO SUTHAN AUTOS TO SOLVE YOUR PROBLEM*
சகலவிதமான மோட்டார் வண்டி திருத்து வேலைகளுக்கு,
குறைந்த விலையில் நிறைந்த சேவைக்கு சங்கர்

CALL SHANKER ON 020 8544 1151 / 07977 273 079 / 07970 313 656
UNIT 8, 26 BUSHEY ROAD LONDON SW20 8LW





**AUTO PLUS**

THE WORKSHOP
MOT TEST CENTRE
Servicing Clutches, Brakes, Gearboxes, Engines, Exausts, etc.
Tel: 020 8520 0047
020 8521 3000
Fax: 020 8520 0048
72-73 Brunner Road, Walthamstow, London E17


FREE TYRE & BRAKE SAFETY CHECKS
All mechanical works undertaken unbeatable prices
Tyres, Exausts, Brakes, Part worn tyre specialists Balancing, Punctures, Tracking
Tel: 020 8521 9696
152a Hoe St., Walthamstow, London E17 (Corner of Hatherley Rd.)



**CCR INSURANCE BROKERS**
For your motor, commercial, household
Also travel, medical & manymore insurance needs
CALL US
WEMBLEY 0208 904 9686
Ravi 96, Sudbury Avenue
EASTHAM 020 8548 1234
Shankar 132 Katherine Road
உங்களின் மோட்டார், வர்த்தக வீடு மற்றும் அனைத்து காப்புறுதிகளுக்கும் நாடுங்கள் சீ.சீ.ஆர்



**TR AUTOS**



MOT While you wait
Class 4 and Class 7

Private Car, Taxies, Commercial Van, MOT Works, Service, Electrical Works, Welding, Brakes, Clutches, Tyres, Engine Tuning, Exaust, Accident Repairs, Insurance Works, Gear Box (Automatic and Manua;l)
Please Contact THARMA
Tel: 020 7252 4438

உங்கள் மோட்டார் வண்டியின் தேவை எதுவாயினும் உத்தரவாதத்துடன் நிறைவாக குறைந்த செலவில் செய்வதற்கு நாடுங்கள்
தர்மா 020 7252 4438

Collection & Delivery Service Available
111-113 Elephant Road, London SE17 1LB



**உதயன்**
பத்திரிகை கிடைக்காதவர்கள் காப்பிக்கு **45p** செலுத்தி 25-27 High Street, Edgware வந்து எவ்வளவு copy வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் தபால் முலமாக பெற விரும்புவோர் 12 Copyக்கு **£10** அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். விவரங்களுக்கு 020 8952 5677 தொடர்பு கொள்ளவும்.

## 116 இலங்கையர்கள் யேமனில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டனர்

இலங்கையில் இருந்து யேமனுக்கு வந்த 116 இலங்கையர்கள் செப்ரம்பர் 29ம் திகதி இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டு உள்ளனர். கடந்த மாதம் இவர்கள் வந்த கப்பலின் மாலுமிகள் ஏடன் துறைமுகத்தில் சட்டவிரோதமாக நுழைந்ததற்காக அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு உள்ளதாக ஏடன் துறைமுக அதிகரிகள் தெரிவித்து இருக்கின்றனர். மேலும் இலங்கை, உக்ரெனியன் நாட்டு கொடிகளுடன் வந்த கப்பலின் மாலுமிகள், தாம் கொண்டு வந்தவர்களை பாதுகாப்பற்ற வள்ளங்களில் இறக்கி அவர்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் குற்றம்சாட்டப்பட்டு உள்ளனர். புலம்பெயர்பவர்களை இறக்கிவிட்டு அக்கப்பல் எங்கு பயணிக்க இருந்தது என்பதை அந்த மாலுமிகள் தெரிவிக்கவில்லை.

ஐரோப்பாவுக்கு சட்டவிரோதமாக ஆட்களை கடத்தும் முகவர்கள் யேமனை தரிப்பிடமாக பயன்படுத்துவதாக யேமன் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மேலும் யேமனுக்கு அருகில் உள்ள சவுதி அராபியா போன்ற செல்வந்த வளைகுடா நாடுகளுக்கு சட்டவிரோதமாக நுழைபவர்களும் யேமனை பயன்படுத்துவதாக அவ்வதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பெரும்பாலும் ஆசியாவில் இருந்து புலம்பெயர்பவர்கள் இவ்வாறு யேமனை பயன்படுத்துகின்றனர்.

இலங்கையர்கள் 116 பேரும் ரஷ்ய விமானம் ஒன்றில் திருப்பி அனுப்பப்பட்டதாக ஏடன் துறைமுக அதிகாரி மொகமட் முபாரக் தெரிவித்தார்.

## அமெரிக்க அதிகாரிகள் இலங்கை விஜயம்

மூவர் கொண்ட அமெரிக்க கடற்படை அதிகாரிகள் குழு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். கொழும்புத் துறைமுகத்தை பார்வையிட சென்ற இவர்களது விஜயத்துக்கும் அப்கானிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கைக்கும் சம்பந்தம் இல்லை என அமெரிக்க தூதரகம் தெரிவித்து இருக்கிறது. கடற்படை அதிகாரிகளது விஜயம் ஏற்கனவே திட்டமிடப்பட்டதாகவும் இது ஓர் வழமையான பாதுகாப்பு சோதனை என்றும் தூதரகம் தெரிவித்து இருக்கிறது. அப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்த இலங்கை தனது முழு ஆதரவை வழங்கி இருப்பது தெரிந்ததே.

அமெரிக்க கடற்படை அதிகாரிகள் கொழும்புத் துறைமுகத்தின் பாதுபாப்பையும் வசதிகளையும் சோதனையிட்டனர். கொழும்புத் துறைமுகம் 1996ம் ஆண்டு தாக்குதலுக்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது. 3 நாட்கள் தங்கி பரிசோதனைகளை மேற்கொண்ட அதிகாரிகள் மற்றய இரு முக்கிய துறைமுகங்களான காலி, திருமலைத் துறைமுகங்களுக்கு செல்லவில்லை.

## ஏனைய பகுதிகளிலும் இலண்டனில் குற்றங்கள் இரட்டிப்பு

பிரித்தானியாவின் ஏனைய சில பகுதிகளிலும் இலண்டனில் குற்றச்செயல்கள் இரட்டிப்பாக காணப்படுகிறது என செப்ரம்பர் 26ல் புள்ளி விபர அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை தெரிவிக்கிறது. இப்புள்ளி விபரம் 1999 - 2000 ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. இலண்டனில் 100,000 மக்களுக்கு 14,000 பேர் குற்றச் செயல்களால் பாதிக்கப்படுவதாக அப்புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

இலண்டன் வாசிகள் பாலியல் மற்றும் கொடூரமான குற்றச் செயல்களால் பாதிக்கப்படுவது நாட்டின் சராசரியிலும் இரட்டிப்பாக உள்ளது. மேலும் இலண்டனில் வசிப்பவர்கள் களவு மற்றும் களவாடப்பட்ட பொருட்களை கையாள்வது போன்றவற்றில் அதிகம் ஈடுபடுவதும் தெரியப்படுத்தப்பட்டு உள்ளது.

## சவுத்தோல் : இன ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு

வட இங்கிலாந்தில் இடம் பெற்ற சமூக கலவரத்தை தொடர்ந்து அரசு குழு ஒன்று அமைக்கப்பட்டு இருக்கிறது. வெவ்வேறு பகுதிகளில் இனப் பதட்டம் ஏற்பட்ட போதும் சவுத்தோல் பகுதி அமைதிகாத்தது. கலவரத்துக்கான காரணங்களை கண்டறிய உருவாக்கப்பட்ட 8 உறுப்பினர்களை கொண்ட குழு செப்ரம்பர் 18ம் திகதி சவுத்தோலுக்கு விஜயம் செய்தது.

அவர்கள் சமூகத்தலைவர்கள், வர்த்தகர்கள், காவல்துறையினர், மாணவர்கள், உள்ளாட்சியாளர்கள் என அனைவரையும் சந்தித்து உரையாடி சவுத்தோலின் இன ஒற்றுமையின் இரகசியத்தை அறிந்தனர். இவ் 8 உறுப்பினர்களதும் அறிக்கை உள்நாட்டு அலுவலக அமைச்சர் ஜோன் டென்□ாமிடம் நவம்பர் இறுதியில் கையளிக்கப்படும். மேலும் இக்குழுவினர் கொள்கைகளை வடிவமைப்பதற்கான ஆலோசனைகளை அரசுக்கு தெரியப்படுத்துவார்கள்.

சவுத்தோல் மக்கள் தம்மை சவுத்தோல் மக்களாகவே அடையாளம் காண்பது ஆச்சரியமாக இருப்பதாக அரச குழுவுக்கு தலைமை ஏற்ற ரெட் கன்ரிள் தெரிவித்தார். வேறுபாடுகள் வீதிக்கு வருவதில்லை. மக்கள், காவல்துறை, உள்ளாட்சி என பலதரப்பும் இணைந்து வேலை செய்கிறார்கள். வட இங்கிலாந்தில் இவ்வகையான கலந்துரையாடல் இல்லாமல் இருக்கலாம் என பெந்தல் கிறீன் பெரனஸ் உடின் தெரிவித்தார். Southall Regeneration Partnership ன் உதவித் தலைவர் 'சவுத்தோல் மதக்குழுக்களாக பிளவுபடவில்லை எல்லோரும் சவுத்தோலை தமது நகரமாக பார்க்கிறார்கள்' என தெரிவித்தார்.

HETROS FRAMING
Picture Framing on Premises
Bespoke and contranct framing
We stock fine arts limited edition by most leading artist
All mirrors kind of
020 8204 7070
417 HONEYPOT LANE
STANMORE MIDDX

## உலக ஊடகங்களின் பார்வை

அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு உலகெங்கனும் உள்ள ஊடகங்கள் அனைத்தும் கண்டனம் தெரிவித்து உள்ளன. ஆனால் மேற்கு நாடுகளில் உள்ள வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் போல் அன்றி மேற்குலகு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருந்து வந்த கண்டனங்கள் முற்றிலும் மாறுபட்டவையாக இருந்தன. அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதல் தான் முதல் பயங்கரவாத தாக்குதலா? உலகின் ஏனைய பாகங்களில் பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெறவில்லையா? இப்படி ஒரு கொடூரமான தாக்குதலை நடத்த காரணம் என்ன? யார் அந்த பயங்கரவாதிகளை உருவாக்கியது? என பல கேள்விகளுக்கான விடைகளுடன் அவர்களது கண்டனம் வெளியானது. அமெரிக்காவில் கொல்லப்பட்ட மக்கள் எவ்வளவு அப்பாவிகளோ அதே போல பலஸ்தீனத்தில், காஷ்மீரில், இலங்கையில், கியூபாவில்,...................... கொல்லப்பட்ட மக்களும் அப்பாவிகளே என்றெல்லாம் கண்டனங்கள் வந்து உள்ளது.

DULHANIA [THE BRIDE]
Specialists in South Indian Sarees
PUNJABI SUITS, LENGHA SUITS
SHAWLS, DUPATTAS, Saree Blouse - £2.50
BINDIS - POTUS - 5 for £1; Peticoat - £2.50
Garlands [Swami male £1 - £2
Bedsheets, Jewellery, Gift Articles - Sandles, Bangles
[STICHING ORDERS FOR SAREE Blouse Taken - our Material-our STICHING £5]
EVERYTHING AT REASONABLE PRICE
YOUR VISIT - OUR PLEASURE
169 LONDON ROAD [NEAR MITCHAM LIBRARY] MITCHAM SURREY
OPEN 7 DAYS
Tel: 020 8648 7306

## பிரஜைகளுக்கான அடையாள அட்டை

அமெரிக்கா மீது செப்ரம்பர் 11ம் திகதி நடத்தப்பட்ட பயங்கரத் தாக்குதலை அடுத்து மேற்கு நாடுகள் தமது நாட்டை எப்படி பயங்கரவாதிகளின் தாக்குதல்களில் இருந்து காப்பாற்ற முடியும் என தீவிரமாக சிந்தித்து வருகின்றன. குறிப்பாக பிரித்தானியா இது விடயத்தில் தீவிர கவனம் எடுத்து வருகிறது. பயங்கரவாதிகளின் செயற்பாடுகளை தடுக்க அல்லது கட்டுப்படுத்த பிரஜைகளுக்கான அடையாள அட்டையை அறிமுகப்படுத்த உள்ளார் உள்துறை அமைச்சு செயலாளர் டேவிட் பிளங்கெட். 86 வீதமான மக்களும் இப்படியான ஓர் அடையாள அட்டை அறிமுகப்படுத்துவதை வரவேற்று இருந்தனர்.

ஆனால் அடையாள அட்டையை கேட்கும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்படமாட்டாது என உள்துறை அமைச்சு செயலாளர் தெரிவித்து இருக்கிறார். 'Your ID card please' என காவல்துறையினர் கேட்பது சிறுபான்மை சமூகங்களுடனான உறவை பாதிக்கும் என கருதப்படுவதால் காவல்துறையினருக்கு அதனை கேட்கும் அதிகாரம் வழங்கப்படப் போவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடவுச் சீட்டு, ஓட்டுனர் அட்டை மற்றும் கிறடிட் காட் இவற்றுடன் தொடர்புடையதாக பிரஜைகளுக்கான அடையாள அட்டை வடிவமைக்கப்பட உள்ளது. பெயர், பிறந்த திகதி போன்ற வழமையான விபரங்களுடன் விரல் அடையாளம், கண்ணின் ஐரிஸ் இன் பதிவு, பரம்பரையியல் பதிவு ஆகிய தனித்துவமான விபரங்களும் புதிய அடையாள அட்டையில் சேர்க்கப்பட இருக்கிறது.

காவல்துறையினருக்கு அடையாள அட்டையை கேட்கும் அதிகாரம் வழங்கப்படாததால் பயங்கரவாதிகளை கட்டுப்படுத்துவதில் இவ் அடையாள அட்டைகள் குறிப்பிடக் கூடிய பங்களிப்பை செய்ய மாட்டாது. ஆனால் அரசாங்கத்தின் வெவ்வேறு சேவைகளை பயன்படுத்துவதற்கு இவ்வடையாள அட்டை அவசியமாகும்.

## 43,000 விண்ணப்பங்கள் இன்னமும் தேக்கம்

இன்னமும் பரிசீலிக்கப்படாமல் 43,000 விண்ணப்பங்கள் தேங்கி இருப்பதாக உள்துறை அமைச்சு தெரிவித்து உள்ளது. 2000 ஆண்டில் 103,000 ஆக இருந்த தேங்கிய விண்ணப்பங்கள் 2001 ஓகஸ்ட்டில் 22,580 ஆக குறைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் செப்ரம்பர் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எண்ணிக்கைப்படி இன்னமும் 43,000 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாமல் இருப்பது தெரிய வந்து உள்ளது.

EXCLUSIVE WEDDING SILK SARIES
VISIT
CHUNISONS | Chandni SILK HOUSE | Rangoli
174 Ealing Road Wembley Middlesex | 148 Ealing Road, Wembley Middlesex | 144 Ealing Road, Wembley Middlesex
Specialists in pure Kanjiwaram, Kolam, Ranjoli, Dakshotri, Manowaram, Kurai, Reseption and Registration Saries to suite all occasions.
New arrivals Pure tissue Kanjiwaram Sariees Also Specialist in Saree Blouses round neck, Punjabi suites, Artificial Jewellery, All type of skirts and Blouse

உதயன்
அவசர செய்திப் பிரிவு
தொடர்புகளுக்கு
+4420 8905 7775

DEEPAM STORES
ஒவ்வொரு சனிக்கிழமையும் பங்கு இறைச்சியும் FRESH FISHம் கிடைக்கும்
Opening Special Offer!
எல்லா விதமான மீன் வகைகளும்
£2.49
339 High Street North, Manor Park E12 6PG
Tel/Fax: 020 8470 1614
சகல விதமான மளிகை பொருட்களும் உடனுக்குடன் மரக்கறி வகைகளும் HALAL இறைச்சி மீன் வகைகளும் எம்மிடத்தில் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

IMPORTERS




IMPORTERS

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*

**50% discount off RRP**




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

**(collect same day)**

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**

**Elite House, The Broadway,**
**West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm - Sat 10am-5pm - Sun 10am - 2pm

# தீவிர அடிப்படைவாதிகளுக்கு பிளங்கெற் எச்சரிக்கை

பிரித்தானியாவில் இருந்து செயற்படும் தீவிர அடிப்படைவாதிகள் கூர்மையாக அவதானிக்கப்பட்டு வருவதாக உள்துறை அமைச்சு செயலாளர் டேவிட் பிளங்கெற் தெரிவித்து உள்ளார். சேக் ஓமர் பக்ரி மொகமட் போன்ற தீவிர இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மேற்கு நாடுகளுக்கு எதிராக விஷமத்தனமான பிரச்சாரங்களை மேற்கொள்வதுடன் பிரித்தானிய முஸ்லீம்களை பயங்கரவாத குழுக்களாக திரட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பக்ரி, பிபிசி ரெடியோ 4 க்கு வழங்கிய செவ்வியில் பாகிஸ்தான் ஆட்சி தலைவர் முஷ்ரப் அமெரிக்காவுக்கு உதவுவதால் அவரை கொல்ல பட்வா ஆணையை விடுத்தார் என்று தெரிவித்துள்ளார்.

1980ல் அரசியல் தஞ்சம் கோரிய பக்கிரியின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு இருந்தாலும் பிரித்தானியாவில் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. தற்போது பக்கிரி போன்றவர்களுக்கு எதிராக புதிய சட்டங்கள் அமுலாக்கப்பட இருக்கிறது. இந் நடவடிக்கை உண்மையான அகதிகளையும் சிவில் உரிமைகளையும் பாதிக்கும் என கருதப்படுகிறது.

# டோவரில் மேலும் இறுக்கம்

டோவரினூடாக பிரித்தானியாவினுள் நுழைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த £9 மில்லியன் செலவில் 5 காமா கதிர் ஸ்கானர்களை உள்துறை அமைச்சு கொள்வனவு செய்ய உள்ளது. இதன் மூலம் டோவரில் வாகனங்களிலும் பிரான்சில் ஈரோரனல் ரேமினலாலும் மறைந்து வருபவர்களை கண்டுபிடிக்க முடியும். மேலும் ஹீத்ரோ விமானத் தளத்திலும் மேலதிக CCTV க்கள் பொருத்தப்பட இருக்கிறது. அத்துடன் டோவரில் மேலதிக குடிவரவு அதிகாரிகள் வேலைக்கு அமர்த்தப்பட உள்ளனர்.

# வீட்டிலேயே குழந்தைப் பேற்றை செய்யலாம்

தாய்மை நிலையில் உள்ளவர்கள் வீட்டில் வைத்தே குழந்தையை பெற்றெடுக்கலாம் என்பதை அறியாதவர்களாக உள்ளனர் என தேசிய மகப்பேற்று அமைப்பு தெரிவிக்கிறது. இங்கிலாந்திலும் வேல்சிலும் 2 வீதமான பெண்களுக்கு மட்டுமே வீட்டில் மகப்பேற்றை நிகழ்த்தலாம் என்ற தெரிவு வழங்கப்பட்டு இருப்பதாக அவ்வமைப்பு மேலும் தெரிவிக்கிறது. தற்போது சுயாதீன மகப்பேற்று தாதியாக இருப்பவரும் முன்னாள் மகப்பேற்று தாதிகளுக்கான றோயல் கல்லூரியின் தலைவியுமான கரோலின் பிலின்ற் தாய்மை அடைந்தவர்களுக்கு அவர்கள் வீட்டில் மகப்பேற்றை செய்யும் தெரிவு வழங்கப்பட வேண்டும் என்கிறார்.

இதன் மூலம் தேசிய சுகாதார சேவைகள் அமைப்பு பல மில்லியன் பவுண்களை சேமிக்கலாம் எனவும் அவர் நம்புகிறார். அவர் மேலும் குறிப்பிடுகையில் மகப்பேறு தொடர்பாக பல உண்மைக்கு புறம்பான விடயங்கள் பெண்களை குழப்பமடையவும் பயப்படவும் செய்துள்ளது என்று தெரிவித்தார். தனது 26 வருட மகப்பேற்று சேவையில் வீட்டில் வைத்து மேற்கொண்ட ஒரே ஒரு மகப்பேறு மட்டுமே சிக்கலானதாக அமைந்தது என குறிப்பிட்டார். அது அப்பெண்ணுக்கு முதல் குழந்தை.

'இன்று வீட்டில் மகப்பேறு' கருத்தரங்கில் வீட்டில் மகப்பேறு தொடர்பாக பல விடயங்கள் ஆராயப்பட இருக்கிறது. ஆபத்து குறைவான மகப்பேறுகளை வீட்டில் மேற்கொள்ளும் தெரிவு வழங்கப்பட வேண்டும் என 1998ல் ஆலோசனை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**FRANCO MAINTENANCE**

*We Supply and Maintain*

AIR CONDITIONING
FRIDGES, DAIRY UNITS
ALL KINDS OF ELECTRICAL WORK
SHOP FITTINGS
CCTV CAMERAS

FOR A FRIENDLY AND EFFICIENT SERVICE CALL SUREN OR GERADE
FOR HOT LINE
07989 176 348 / 07870 646 392

TEL: 020 8286 9031 FAX: 020 8337 5787

ALL WORK GURANTEED NO CALL OUT CHARGES FREE ESTIMATION

# குளிர்கால காய்ச்சல் - எச்சரிக்கை

இலண்டனில் உள்ள மருத்துவமனைகள் குளிர்கால வைரஸ் தாக்குதலுக்கு தம்மை தயார்படுத்தி வருகின்றன. மருத்துவமனைகள் மேலதிக படுக்கைகளை ஒழுங்கு செய்வதுடன் சில பகுதிகளில் வீடுகளுக்கு சென்று சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்நோயில் இருந்து தப்பிக்கும் வழிமுறைகளும் பரப்பப்பட இருக்கிறது. 65 வயதுக்கு மேலானவர்கள் இவ்வைரஸினால் தாக்கப்படும் அபாயம் அதிகம். ஆகவே அவர்கள் தடுப்பூசி போட்டுக் கொள்வது அவசியம். மேலும் நீரிழிவு, ஆஸ்த்மா அல்லது வேறு சுவாசத் தொகுதியுடன் தொடர்பான நோயுடையவர்கள், உயர்குருதி அழுத்தம், இதய நோய்கள், சிக்கில் செல் அனீமியா, சிறுநீரா நோய்கள் உடையவர்கள் அதிக கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

# தொப்பிள் விழாத குழந்தை 20 அடி உயரத்தில் இருந்து வீழ்ந்தது

15 வயது சின்னத்தாயின் குழந்தை நியுஹாம் கஸ்டம் கவுஸின் முதல் மாடியில் இருந்து வீழ்ந்தது. செப்ரம்பர் 30ம் திகதி பகல் 12:30 மணி அளவில் வீழ்ந்த குழந்தை உடனடியாக பாதசாரி ஒருவரால் காணப்பட்டு வைற்சப்பலில் உள்ள றோயல் இலண்டன் மருத்துவ மனைக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்டது. தற்போது குழந்தை தேறி வருகிறது. இச்சம்பவம் தொடர்பாக சிறிய ஆசிய தாயின் பெற்றோர்கள் கைது செய்யப்பட்டு பெயிலில் விடுவிக்கப்பட்டு உள்ளனர்.

# மாணவர்களுக்கு பணக் கொடுப்பனவு தொழிற் கட்சியின் திருப்பம்

மாணவர்களுக்கான பணக்கொடுப்பனவை மீளக் கொடுக்க அரசு முடிவெடுத்து உள்ளது. தொழிற்கட்சியால் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விக் கட்டணமும் (tution fee) இல்லாமல் செய்யப்படும் என தெரியவருகிறது. குறைந்த வருமானம் உடைய குடும்பங்களில் பணப் பிரச்சனை உயர் கல்விக்கு தடையாக இருப்பதால் அரசு இந்த முடிவுக்கு வந்து உள்ளது. மேலும் maintenance grant ம் மீளக் கொண்டுவரப்பட இருக்கிறது.

அனால் மாணவர்கள் பட்டதாரிகளாக வெளியேறும் போது அவர்கள் அடுத்த 20 முதல் 25 ஆண்டுகளுக்கு மேலதிக வருமானவரி (graduate tax) செலுத்த வேண்டும். இப்புதிய ஏற்பாடுகள் 2003ற்கு பின்னரே அமுலுக்கு வர உள்ளது. ஆனால் தற்போது உள்ள பட்டதாரிகள் மேலதிக வரி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

# கிழக்கு தீமோரின் இளைய பாராளுமன்றம்

இந்தோனேசியாவின் பிடியில் இருந்து 1999ல் சுயநிர்ணய உரிமை பெற்ற கிழக்கு தீமோரின் சுதந்திர அரசு Mari Alkatiri (Fretilin -கிழக்கு தீமோரின் பெரிய அரசியல் கட்சி - தலைவர்) தலைமையில் செப்ரம்பர் 20ம் திகதி பொறுப்பேற்றது. இதுவரை ஐ நா - கிழக்குதீமோர் உறுப்பினர்களை கொண்டு இயங்கிய பரிமாற்று நிர்வாகம் சிறிது சிறிதாக அடுத்த ஆண்டுக்குள் கிழக்கு தீமோரின் முழு நிர்வாகத்தையும் புதிய கிழக்கு தீமோர் நிர்வாகத்திடம் கையளிக்கும்.

தற்போது தெரிவு செய்யப்பட்ட நிர்வாக அமைப்பு கிழக்கு தீமோரின் யாப்பை உருவாக்கும். அதன் பின் இவ்வமைப்பு பாராளுமன்றமாக மாறும். (கிழக்கு தீமோர் பாராளுமன்றத்தின் 88 ஆசனங்களில் Fretilin 55 ஆசனங்களை கொண்டு இருக்கிறது.) அதன் பின் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும். முன்னால் விடுதலை இயக்க தலைவர் Xanana Gusmao இதில் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கொன்சவேடிவ் கட்சியின் முதல் ஆசிய துணைத் தலைவர்

கொன்சவேடிவ் கட்சி தீவிர வலதுசாரிப் போக்கை கடைப்பிடிக்கிறது என்ற குற்றச்சாட்டை நிவர்த்திக்கும் வகையில் கட்சியின் உப தலைமைப் பொறுப்பு ஆசிய இனத்தவருக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. சாலிஸ் வாரா(41) என்ற உகண்டாவில் இருந்து புலம்பெயர்ந்த ஆசியரான வாரா தெற்கு நோத்தம்ரன் தொகுதியில் தோல்வி அடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்துவான வாரா பெருமளவு முஸ்லீம்கள் வாழும் தொகுதியான தெற்கு நொத்தம்ரனில் தேர்தலில் நின்றார். அத் தொகுதியில் போட்டியிட்ட தொழிற்கட்சி வேட்பாளர் மதப்பாகுபாட்டை மையப்படுத்தி வாக்குகளை கவர்ந்ததாக அப்போது குற்றம் சாட்டப்பட்டது.

தீவிர வலதுசாரியான வில்லியம் □க் கட்சியை தீவிர வலதுசாரிப் பாதையில் இட்டுச் சென்று இருந்தார். அவரைத் தொடர்ந்து வலதுசாரியான இயன் டங்கன் சிமித் கொன்சவேடிவ் கட்சி தலைவராக தெரிவு செய்யப்பட்டார். தொடர்ச்சியான வலதுசாரித் தலைமை கட்சியினுள் இனவாதத்தை வளரவிட்டு இருந்தது. கொன்சவேடிவ் கட்சிக்கும் பிரித்தானிய தீவிர வலதுசாரிக் கட்சியான BNP இற்கும் இடையே வேறுபாடுகள் குறைவாகவே இருந்தது. மேலும் இயன் டங்கன் சிமித்தின் பிரச்சாரப் பிரிவில் BNP ஆதரவாளர்கள் இருந்ததும் தெரிந்ததே.

பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படாத ஒருவருக்கு கட்சியின் உப தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். தனக்கு இப்பதவி வழங்கப்பட்டதில் மகிழ்ச்சியை தெரிவித்து இருக்கும் வாரா கட்சியின் கொள்கைகளை மக்களிடம் எடுத்து செல்வதில் ஆர்வமாக இருப்பதாக தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் தனது திறமைக்கே இப்பதவி வழங்கப்பட்டதாகவும் தான் ஆசியர் என்பது அதற்கு சம்பந்தமற்றது என்றும் தெரிவித்தார்.

**SUNRISE DOUBLE GLAZING**
சன்ரைஸ் டபுள் கிளேசிங்

Manufacturer & Installers of Double Glazed Window
Doors-Patio Doors and Conservatories in Aluminium and PVC

We are specialist in
lead and bevels Georgian and
any design pictures welcome

Special offer
Front 7 windows top
flowers absolutly free

வீட்டின் முன் 7 ஜன்னல்களின் பூ அலங்காரம் இலவசமாக செய்து கொடுப்போம்
மேலதிக விபரங்களுக்கு

Tel: 020 8478 7390
Fax: 020 8514 2882

749, Romford road
Manor park
London E12

**NATRAJ SWEET CENTRE**

Curry & Rice available everyday

Natraj
The name behind the quality

Come and visit our Newly Refurbished
Sweet Centre

Natraj
Where the quality starts

The Best is Pure Vegetarian Indian Cuisine
for Weddings, Parties, Religious Events
& Special Occasion

We have a vast selection of delicacies
indian sweets
& savouries to take away

PURE VEGETARIAN CATERER FOR EXCLUSIVE WEDDINGS & PARTIES
RING FOR A MENU

341 NORTHOLT ROAD, SOUTH HARROW, MIDDX. HA2 8JB
TEL: 020 8426 8903 FAX: 020 8248 2255


MATHANGI
PRODUCTS
ROASTED RICE FLOUR
BUY 2 GET 1 FREE
CURRY POWDER
ROASTED RICE FLOUR
தாய்நாட்டுச் சுவையை மீண்டும் சுவைத்திட விரும்பும் சுவைப்பிரியர்களுக்கு, ஒருமுறை சுவைத்தால் மீண்டும், மீண்டும் சுவைக்கத்தூண்டும் 'மாதங்கி' தயாரிப்புக்களை இன்று இலண்டனிலுள்ள எல்லா தமிழ்க் கடைகளிலும். இரண்டு வாங்கினால் ஒன்று இலவசமாய் பெற்றிடலாம்.
இச்சலுகை குறிப்பிட்ட தினங்கள் மட்டுமே!
இந்த சந்தர்ப்பத்திற்கு முந்துங்கள்
உங்களின் ஏக விநியோகிஸ்தர்கள்:
Spiceway Ltd.
Unit-4, College Field
Prince Georges Road
Merton, London SW19 2PX
Tel: 020 8685 1122
020 8685 1133
Fax: 020 8 685 1144
e-mail: spicewayltd@hotmail.com
ROASTED RICE FLOUR
சுவையான சமையலுக்கு... மாதங்கி
Ribbena Products
Larich Products
Priya Products
M.D. Products
Mathangi Products
Samudra Sea Foods

# A.STAR
ALBUMS

*Albums of Distinction*

Wedding Album Manufacturers
Unit B2, Charles House, Bridge Road,
Southall, Middx UB2 4BD
020 8813 8213
www.staralbums.co.uk



OUR STOCKISTS:

VETERAN Digital Photographic Services

ACE PHOTO LAB
Digital Photographic Services
121 High Street, Yiewsley,
West Drayton UB7 7QL
01895 437000


# பணியாளர்கள் போராட்டம்

உதவிநல கொடுப்பனவு முகவர் benefit agency பணியாளர்களும் வேலைமைய job centre பணியாளர்களும் நாடுதளுவிய போராட்டத்தில் ஈடுபட்டனர். பொது மற்றும் வர்த்தக சேவை Public and Commercial Services (PCS) அமைப்புகளின் தொழிற்சங்கம் செப்ரம்பர் இறுதியில் இப்போராட்டத்தை மேற்கொண்டனர். வேலைத் தளத்தில் பணியாளர்களுக்கும் உதவி பெறவரும் நுகர்வோருக்கும் இடையே இருக்கும் பாதுகாப்பு தடையை அகற்ற ஆலோசிக்கப்பட்டது தொடர்பாகவே இவ் வெளிநடப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் உதவிக் கொடுப்பனவு முகவர் பிரிவு வேலை மையத்துடன் இணைக்கப்பட்டு வேலைமையம் பிளஸ் Jobcentre Plus ஆக்கப்பட இருக்கிறது.


HARI AUM HOLIDAYS
Unique Low Cost Tours with A Touch of Culture!

DUBAI
SHOPPING & ADVENTURE TOUR
ALL EXCURSION INCLUSIVE & VEGETARIAN MEALS
SHOP TILL YOU DROP AND DANCE TILL DAWN
Over 50 Tours Successfully Operated to-date
Full Customer Satisfaction.
DUBAI SHOPPING £525pp+
(525 Travel Insurance pp)
GOLD SURPRISE DURING 2001
EVERY PERSON RECEIVES 22ct Gold
Hari Aum Surprise

EUROPEAN TOURS
FRANCE & SWISS Every Tuesday - £199 (5 Days)
N. CYPRUS - - £ 525 (8 Days)
JEWELS OF MEDITERRANEAN - LUXURY CRUISE
Be part of it (8 Days)
13-20 Dec (7 Night) £ 599 +pp
BANGOK & PATTAYA (BEACH) 9 Days
(6 Night) £650 + pp
HURRY! LIMITED PLACES ONLY
Call us FREE for details on other tours & services on
0800 092 1296
All Holidays with Air Travel is operated by Atlantic & Pacific Travel Ltd. ATOL 2215
560 North Circular Road
Neasden, London NW2 7DP
Tel: 020 8452 0350
Fax: 020 8452 1144
e-mail: aum9@hotmail.com
RETAIL AGENTS FOR MAJOR ATOL HOLDERS

BANSI HOLIDAYS
DUBAI TOUR 5 Nights
Only £ 399
SOUTH INDIA with GOA Nov. 24 - Dec. 22 '01
BOMBAY, TIRUPATHI, TRICHI, MADURAI, OOTY, PUTAPARTHY AND GOA + MANY MORE DESTINATION
FOR ONLY ADULT £995
CHILD £895
Call us on 020 8349 3823

16 Minerva Road
Park Royal
London NW10 6HJ UK
Shiv Souvenirs Ltd
Importers and Wholesale Distributors
Fancy Goods TOYS gifts Souvenirs and many more
Tel: 020 8963 0512/3
Fax: 020 8963 0518
Email:shivsouvenirs@aol.com

* * * * * *

Sp fx
Spring FX Group Ltd.
* No Commission on Currencies
* Excellent Rate of Exchange
* Travellers Cheques
Spring Bureau de Change Ltd.
Head Office:
32 Spring Street,
Paddington, London W2 1JA
Tel: 020 7723 7960 Fax: 020 7724 7712
Branch:
176 Earls Court Road,
Earls Court, London SW5 9QQ
Tel: 020 7835 0945
www.Springfx.com

# காரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம்

## கடின உழைப்பாளியான தாயார் மரணம்

கனடா, ஸ்காபறோ பகுதியில் இந்திய-இலங்கை புடவைக் கடைக்கு முன் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் தாயார் ஒருவர் கொல்லப்பட்டார். செம்ரம்பர் 20ம் திகதி மாலை 10 மணி அளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. கடின உழைப்பாளியான இவரும் இவரது கணவரும் நடத்தி வரும் புடவைக் கடைக்கு முன்பாக வைத்தே இத்தாயார் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது கொலை அப்பகுதி தமிழ் மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சிவமலர் சங்கரப்பிள்ளை (45) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கிறார். Ellesmere Village plaza at Ellesmere and Kennedy Rds ல் உள்ள அவர்களது புடவை மாளிகைக்கு சில அடிகள் தள்ளியே இவர் சுடப்பட்டு இருக்கிறார். யாருக்கும் தீங்கு விளைவிக்காத, எதிரிகள் யாரும் அற்ற இவர் ஏன் சுடப்பட்டார் என அங்குள்ள தமிழர்கள் விசனப்படுகின்றனர். இறந்தவரது மைத்துனர் சபாபதி சபாநடேசன் (68) □அவர்கள் கடின உழைப்பாளிகள், அவ ஒரு நல்ல மரியாதைக்குரிய பெண்□ எனத் தெரிவித்தார்.

சங்கரப்பிள்ளை தம்பதிகள் 10 ஆண்டுகளுக்கு முன்பாக கனடாவில் தஞ்சம் கோரினர். அவர்களுக்கு தற்போது 20 வயதில் ஒரு மகனும் இருக்கிறார். கடின உழைப்பாளிகளான இத்தம்பதிகள் கடந்த ஆண்டு தான் தமக்கென சொந்தமாக ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தனர். இவர்கள் வியாபாரத்தை நடத்திய கட்டிடத் தொகுதியில் உள்ள ஏனையவர்களும் இவர்களை நல்ல உழைப்பாளிகளாகவே பார்த்தனர். அனைவரும் நடந்த சம்பவத்தை இட்டு அதிர்ச்சி தெரிவித்து இருக்கின்றனர்.

இத்துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை விசாரித்து வரும் பொலிஸார் இக்கொலைக்கான காரணம் எதுவாக இருக்கலாம் என இன்னமும் ஊர்ஜிதப்படுத்தவில்லை. ஆனால் இது ஒரு தமிழ் காடைக் குழு ஒன்றின் தாக்குதல் என பொலிஸார் நம்புகின்றனர். ஆனால் சுடப்பட்டவருக்கும் காடைக் குழுக்களுக்கும் எந்த தொடர்பும் இருப்பதாக பொலிஸாருக்கு தெரியவில்லை. சுடப்பட்டவருடைய மகனும் எந்த குழுவிலும் சம்பந்தப்பட்டு இருப்பதாக புலன் விசாரணைகள் தெரிவிக்கவில்லை என பொலிஸார் கூறுகின்றனர்.

முகமூடி அணிந்த இரு ஆண்கள் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு □ொண்டா சிவிக் மொடல் காரில் தப்பி சென்றதை சிலர் பார்த்து உள்ளனர். இது ஒரு களவாடப்பட்ட கார் என பொலிஸார் தெரிவித்து உள்ளனர்.

□ொண்டா சிவிக் மொடல் கார் முன்னர் VVT காடைக்குழுவினால் பயன்படுத்தப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு ஒக்ரோபரிலும் இரு இளைஞர்கள் வெள்ளை □ொண்டா சிவிக் காரில், Kennedy Rds ல் உள்ள கட்டிடத் தொகுதிக்கு அருகில் அமர்ந்து இருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் AK கண்ணன் காடைக்குழுவினால் தவறுதலாக VVT காடைக்குழுவினர் என நினைத்து சுடப்பட்டதாக பொலிஸார் நம்புகின்றனர்.

சிவமலர் சங்கரப்பிள்ளையின் கொலை தொடர்பான விசாரணைகள் தொடர்கிறது. இதே வாரத்தில் மேலும் இரு துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் தமிழர் மத்தியில் இடம்பெற்று இருக்கிறது. இது பற்றிய முழுமையான செய்திகள் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை.

# பழிவாங்கும் தாக்குதல்கள்

## இனவாத தாக்குதல்கள் அதிகரிப்பு

செப்ரம்பர் 11 அமெரிக்கா மீதான தாக்குதலை அடுத்து அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் ஆசிய இனத்தவர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாக அப்கானிஸ்தானியர்கள் மீதும் முஸ்லீம்கள் மீதும் அவர்களது வழிபாட்டு தலங்கள் மீதும் பரவலாக தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கிறது.

அமெரிக்காவில் நடந்த படுகொலைகளை தமக்கு சாதகமாக்கிக் கொண்ட இனவாத நாசிக்குழுக்கள் இனக்காழ்ப்புணர்வை தூண்டிவருகின்றன. ஜேர்மனியின் நாசிக் கட்சி தனது கட்சிப் பிரச்சார ஒளிநாடாவில் ஜேர்மனியின் நிமிர்ந்து நிற்கும் வரலாற்று முக்கியத்துவமான இடங்கள் தாக்கி அழிக்கப்படுவது போன்ற விபரணங்களை காட்டி இனக்குரோதத்தை தூண்டி வருகிறது.

இஸ்லாமிய சமூகத்தின் மீதான காழ்ப்புணர்வு அதிகரித்ததை அடுத்து அமெரிக்காவில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் இஸ்லாமுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என அமெரிக்க, பிரித்தானிய அரசுத் தலைவர்கள் தம்நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தினர். ஆயினும் பரவலாக முஸ்லீம் சமூகத்தினர் மீது நடத்தப்படும் வன்செயல்கள் தொடர்கின்றது. இதற்கிடையே முன்னாள் பிரித்தானிய பிரதமர் மார்கிரட் தட்சர் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தியவர்கள் முஸ்லீம்களாக இருந்த போதும் முஸ்லீம் சமூகத் தலைவர்கள் பயங்கரவாதிகளுக்கு எதிராக முழுமையான எதிர்ப்பை தெரிவிக்கவில்லை என்று கூறியிருந்தார்.

பள்ளிவாசல்களை சேதப்படுத்துவது, முஸ்லீம்களை தாக்குவது, அவர்களை தீண்டும் சொற்களால் திட்டுவது, அவர்களுக்கு விரோதமான வாக்கியங்களை பொது இடங்களில் எழுதுவது போன்ற பல விரோத நடவடிக்கைகள் அதிகரித்து இருக்கிறது. அப்கானிஸ்தானியரான மினிகப் றைவர் தாக்கப்பட்டது, புறோட்வே அபுபக்கர் பள்ளிவாசலுக்கு தொழுகைக்கு சென்றவர்களுக்கு ஓட்டுனர்கள் விரலைக் காட்டியமை, ஈலிங்கில் உள்ள கடையில் பெயர்ப் பலகையில் இருந்த அப்கான் என்ற சொல் பெயின்ட் பூசி மறைக்கப்பட்டமை, எட்ச்வெயரில் BNP - British National Party, NF - National Front ஆகிய இனவாதக் கட்சி உறுப்பினர்கள் தமது அடையாளங்களை வரைந்ததுடன் முஸ்லீம்களுக்கு விரோதமான வசனங்களை எழுதிச் சென்றனர். மேலும் விக்போர்டில் உள்ள இந்திய உணவகத்தின் மீது இரண்டு பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டமை என பல சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

# பயங்கரவாதத்தை பயங்கரவாதத்துடன் போராட முடியாது - சார்ள்ஸ் கென்னடி

'சன்னங்களும் குண்டுகளும் ஜனநாயகம், விவாதம் ஆகியவற்றை வென்றுவிட முடியாது. ஆனால் நாம் ஒன்றை ஞாபகப்படுத்த வேண்டும், பயங்கரவாதத்தை பயங்கரவாதத்துடன் போராடினால் ஜனநாயகத்துக்கு பணி செய்யாதவர்கள் ஆவோம்.' இவ்வாறு செப்ரம்பர் 27ல் நடைபெற்ற லிபிரல் கட்சியின் மாநாட்டில் சார்ள்ஸ் கென்னடி உரையாற்றினார். அவர் தனது உரையில் வெறுப்பும் காழ்ப்புணர்வினதும் கொடுமையான அறுவடை தான் உலக வர்த்தக மையம் மீதான தாக்குதல் என குறிப்பிட்டார்.

இறுதியாக அவர் தனது உரையில் சர்வதேச பிரச்சனைகளை சர்வதேச உடன்பாடுகள், சர்வதேச சட்டங்கள், சர்வதேச கூட்டுறவுடன் தான் தீர்க்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். இதற்காகத் தான் ஐக்கிய நாடுகள் சபை, நேட்டோ, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய அமைப்புகளுடன் நாம் மிகவும் ஒன்றிணைந்து உள்ளோம் என்று கென்னடி குறிப்பிட்டார்.

# 26 இலங்கையர்கள் ஆபத்தான நிலையில் டோவர் வந்தனர்

செப்ரம்பர் 29ம் திகதி 26 இலங்கையர்கள் லொறியில் மறைந்து டோவர் வந்தனர். 23 ஆண்களும் மூன்று பெண்களுமாக வானில் ஒழிந்து வந்த இவர்கள் மிகவும் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டதாக டோவரில் கடமையில் இருந்த சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். வானில் இன்சுலேசன் சீட் ஒன்றுக்கு பின்னால் மறைந்து ஆபத்தான பயணம் ஒன்றை இவர்கள் மேற்கொண்டனர். இவர்கள் மிகவும் குழப்பமான நிலையிலும், நலம் குன்றியும் இருந்ததாக அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். இவர்கள் அடைபட்டு வந்த நிலையை பார்க்கும் போது அவர்கள் உயிரிழந்து இருப்பார்கள் என பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

இவர்களை ஏற்றி வரும் கடற்பாதை (Ferry) தாமதமாகினால் என்ன நடக்கும் என்பதை பொருட்படுத்தாமல் இவர்கள் பயணம் மேற்கொண்டு இருந்ததாக கென்ற் காவல்துறை பேச்சாளர் செய்தியாளர்களுக்கு தெரிவித்தார். டோவர் வந்ததும் ஒருவர் உடனடியாக மருத்துவ வண்டியில் கென்ற் - கன்ரபறி மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். ஏனையவர்கள் சிகிச்சைக்காக டோவர் துறைமுக பஸ்ஸில் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவர்களை பிரித்தானியாவுக்கு அழைத்து வந்தது தொடர்பாக சந்தேகத்தில் வாடகை வானின் சாரதியான 27 வயது ஜேர்மன் பெண் தடுத்து வைக்கப்பட்டார். இவ் வாடகை வான் ஜேர்மனியில் பதிவு செய்யப்பட்டு இருந்தது. தடுத்து வைக்கப்பட்ட Tanja Worner தான் அவர்களை அழைத்து வரவில்லை என்று தன் மீதான குற்றச்சாட்டை மறுத்து உள்ளார். காவல்துறையினர் அவரை ஒக்ரோபர் 8ம் திகதி வரை தடுத்து வைத்து இருந்தனர்.

கடந்த ஆண்டு யூனில் பெல்ஜியத்தில் இருந்து புறப்பட்ட 60 சீனர்களில் 58 பேர் டோவரில் பிணமாக மீட்கப்பட்டனர். இவர்களது இறப்புடன் சம்பந்தப்பட்ட லொறி ஓட்டுனர் பெறி வக்கர் என்ற ஜேர்மனியருக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. இவரை விட இக்கடத்தலில் சம்பந்தப்பட்ட எட்டுப் பேருக்கும் தண்டனை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### Federation of Associations of Canadian Tamils (FACT)

# பினாமிக்குழுவாக கருதப்படுகிறது

கனடியத் தமிழர்களின் அமைப்பான FACT, விடுதலைப் புலிகளின் பினாமி குழு என கனடிய எதிர்க் கட்சி கூட்டணி தெரிவித்து இருக்கிறது. செப்ரம்பர் 11ம் திகதி அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து பயங்கரவாத அமைப்புகளும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட அமைப்புகளும் கனடாவில் நிதி திரட்டுவதை தடுக்கும் சட்டம் கனடிய பாராளுமன்ற விவாதத்துக்கு ஒக்ரோபர் நடுப்பகுதியில் வர இருக்கிறது. இதனை அடுத்தே FACT அமைப்பின் பின்னணி கனடிய கட்சிகளால் ஆராயப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு மே மாதம் FACT அமைப்பு வழங்கிய இராப்போசன விருந்தில் கலந்து கொண்ட நிதி அமைச்சர் போல் மார்ட்டின் FACT பற்றிய முடிவெடுத்தலில் பங்குபற்ற கூடாது என்றும் எதிர்க் கட்சிகள் கேட்டுக் கொண்டு உள்ளன.




உதயன் விளம்பரங்கள் நிச்சயம் வேலை செய்கின்றது. உங்களது மலிவுவிலை விற்பனை, வேலைக்கு ஆட்கள் தேவை, தொழில் விரிவாக்கம் மற்றும் ஏனையவற்றை உதயனில் விளம்பரபடுத்தி பயனடைவீர்

# PRIYA 3 & VANNIAN RESTAURANT

433, High Street North, Manor Park E12 6TJ

Tel: 020 8470 2727

SRI LANKAN & SOUTH INDIAN CUISINE

பிரியமுடன் பிரியாவின் அழைப்பு





Eastham Station முன்பாக முன்னோடியாய் இருந்து Barking Roadல்
**PRIYA 2 & YAAL RESTAURANT**ஆக
சுவையிலும், தரத்திலும் சிறந்த சேவையாற்றி வரும் எமது ஸ்தாபனம்
இன்னும் ஓர் கிளை ஸ்தாபனத்தை, அநேக சுவைப்பிரியர்களின் வேண்டுகோளுக்கு
இனங்க அதே நிர்வாகத்தினரால் வன்னியன் குசைனில்
ஆரம்பித்துள்ளனர்.

வாரத்தில் 7 நாட்கள்

மதியம் 12மணி தொடக்கம் நள்ளிரவு வரை திறந்திருக்கும்

* உங்களின் பார்டி வைபவங்களிற்கேட்ப 50 இருக்கை வசதிகளுடன் கூடிய உணவகம்
* 5 மரக்கறிச் சாப்பாடு (பாயாசம்,வடை,பப்படம் உட்பட) £2.50
* 200 பேருக்கு மேலான பார்ட்டி ஓடர் தருபவர்களுக்கு விசேட விலைக்கழிவுகள் உண்டு

## PRIYA 2 & YAAL RESTAURANT

404 Barking Road E6

Tel: 020 8471 6744 / 7319

தொடர்புகளுக்கு

HEMA 07950 140 933 / 020 8470 2727

உங்கள் உத்துழைப்பிற்கு எங்கள் மனமார்ந்த நன்றி

# புதிய பயங்கரவாதச் சட்டம்

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு பொதுவான பயங்கரவாதச் சட்டம் ஒன்று அடுத்த ஆண்டில் கொண்டுவரப்பட உள்ளது. அதன் படி பயங்கரவாதம் என்பதன் விளக்கம் அனைத்து ஐரோப்பிய நாடுகளுக்கும் பொதுவானதாக இருக்கும். மேலும் பயங்கரவாத குற்றங்களுக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளால் வழங்கப்படும் தண்டனைகளும் கடுமையானதாகவும் ஒரே தன்மையினதாகவும் இருக்கும் என தெரியவருகிறது.

மேலும் தற்போது நடைமுறையில் இருந்த நாடுகடத்தும் நடைமுறை ஐரோப்பிய ஒன்றியத்தால் செப்ரம்பர் 19ல் வெளியிடப்பட்ட பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளால் இல்லாமல் செய்யப்பட்டு உள்ளது. மேலும் 15 ஐரோப்பிய நாடுகளுக்குமான கைது செய்யும் உத்தரவு அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இக்கைது உத்தரவு அகதிகளையும் போதை மருந்துகளையும் நாடுகளிடையே கடத்தும் கடத்தல்காரர்களுக்கும் பயன்படுத்தப்படலாம்.

## ஏன் செப்ரம்பர் 11

அமெரிக்கா மீது ஒஸ்மா பின் லாடனின் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்த ஏன் செப்ரம்பர் 11ஐ தெரிவு செய்தார்கள் என்பது பற்றி பலரும் சிந்தித்தனர். இலண்டன் கார்டியன் பத்திரிகையின் எழுத்தாளரான கிறிஸ் தபர் கிட்சின்ஸின் கணிப்பின் படி 11 செப்ரம்பர் 1683ல் தான் ஓட்டமான் பேரரசின் இஸ்லாமிய படைகள் வியன்னா வாயிலில் வைத்து தோற்கடிக்கப்பட்டனர். இத்தோல்வியில் இருந்து ஓட்டமான் படைகள் மீளவேயில்லை. இத்தோல்விக்குப் பின் கிறிஸ்தவர்கள் அல்லது மேற்கு நாட்டவர்கள் உலகில் ஆதிக்கம் பெற தொடங்கினர்.

# அமெரிக்கர்களுக்கு நிகழ்ந்தது கொடுமை

## ஆனால் இவர்களுக்கு நிகழ்ந்தது இரட்டைக் கொடுமை

நியுயோர்க் நகர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் கொடுமையானது என்பதில் யாருக்கும் வேற்றுமை இல்லை. 80 நாடுகளை சேர்ந்த ஆறாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் பெயர்கள் பட்டியல் படுத்தப்பட்டு வருகிறது. தமது அன்பு உறவுகளை இழந்தவர்கள் அநாதரவாக விடப்படாமல் ஆதரவளிக்கப்படுகின்றனர். ஆனால் உலக வர்த்தக மையத்தில் சமையல், துப்பரவாக்கல் போன்ற வேலைகளில் ஈடுபட்ட சட்டவிரோத குடியேற்றக்காரர்களான பணியாளர்கள் ஆயிரக்கணக்கானோர் என்ன ஆனார்கள் என்பது என்றைக்குமே தெரியவராத நிலை காணப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்காவில் 5 - 11 மில்லியன் சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் சரியான பதிவுப் பத்திரங்கள் எதுவும் இன்றி வாழ்கிறார்கள். இவர்களில் பலர் தமது குடும்பங்களுடனும் தொடர்பற்றவர்களாக உள்ளனர். மெக்ஸிகோவில் இருந்து வரும் பெருமளவானோர் தாக்குதலுக்கு உள்ளான உலக வர்த்தக மையத்தின் உணவகங்களிலும், துப்பரவுப் பணிகள் போன்ற கல்வித்தகுதி தேவையற்ற பணிகளிலும் வேலை செய்து இருந்தனர். இவர்களில் 28 பேர் காணாமல் போயுள்ளதாக Service Employee Union தெரிவித்து இருக்கிறது. மெக்ஸிக்கன் அமைப்புகளின் கூட்டமைப்பு 29 பேர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கிறது. ஆனால் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகம் என்றும் உண்மையான எண்ணிக்கை என்றும் தெரியவரப் போவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமது உறவுகள் உலக வர்த்தக மையத்தில் வேலை செய்வது தெரிந்து இருந்தபோதும் அவர்களை தேடி அங்கு சென்றால் தம்மை அதிகாரிகள் அடையாளம் கண்டு விடுவார்கள் என்ற பயத்தில் யாரும் தேடிச் செல்லவும் தயங்குகிறார்கள். மேலும் அங்கு கொல்லப்பட்டவர்கள் பற்றிய உண்மையான பதிவுகள் எதுவும் இல்லாததால் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்கள் நஸ்டஈடோ ஏனைய உதவிகளோ பெறுவது மிகவும் கடினமாக இருக்கும்.

# நொஸ்ரடாமஸ் புத்தகம் விற்பனையில் முன்னணி

அமெரிக்காவில் நடந்த சம்பவங்களை தொடர்ந்து நொஸ்ரடாமஸின் The Complete Prophecies நூல் மிக அதிகமாக விற்கப்பட்டது. அதனை அடுத்து உலக வர்த்தக மைய கட்டட வடிவமைப்பை பற்றிய நூலும் அதனை தொடர்ந்து பயங்கரவாதத்துக்கு எதிராக போரடுவது எப்படி என்பது பற்றிய நூலும் அதிக அளவில் விற்கப்பட்டது.

16ம் நூற்றாண்டில் வாழ்ந்த நொஸ்ரடாமஸ் ஏவுகணைகளும் விமானங்களும் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னரேயே முதலாம், இரண்டாம் உலகப் போர்களை எதிர்வு கூறியிருந்தார். வானியல் சர்ஸ்திர நிபுணரான நொஸ்ரடாமஸ் நியுயோர்க் அழிவு பற்றியும் தனது நூலில் குறிப்பிட்டு இருந்தார். மதநம்பிக்கை மிகுந்த அமெரிக்க மக்கள் நியுயோர்க் அழிவை தொடர்ந்து நொஸ்ரடாமஸ் மீது தம் பார்வையை திருப்பி உள்ளனர். மேலும் இஸ்லாம் பற்றிய நூல்கள் இங்கு பிரித்தானியாவில் அதிகம் விற்பனையாகிறது.


REES Furniture & Beds
OPENING OFFER

| | | |
|---|---|---|
| Divan Single Beds | From | £ 49 |
| Divan Double Beds | From | £ 79 |
| Wardrobes | From | £ 59 |
| Dining Sets | From | £110 |
| 3 Pc Suite | From | £249 |

ALL COLOURS AVAILABLE Plus BARGAIN PRICED ITEMS AT FACTORY PRICES
TV Cabinets, Hi-Fi, ...............and lots more
756/758 Romford Road, Manor Park, London E12
Tel: 020 8478 8213 / 07961 130 713

* * * * * * * * * * *

INDIAN FUNERAL SERVICE
Established Since 1993
The First And only INDIAN Family owned INDEPENDENT Funeral Directors in England, Speak to us in English, Gujarati or Punjabi. All arrangements in accordance to individual religious rites, Washing and dressing facilities, Shiva Ashram of rest, Priest, Floral arrangements, Saturday and Sunday funerals arranged.
For any enquires, contact us day or night on
020 8361 6151
(24 hrs)
Chandu, Jay, Bhanu, Hansa or Jyoti
Direct Line Mobile number: Chandu Tailor 07957 250851
Please note our NEW Harrow Branch Add...
லண்டனில் முழுக்க இந்தியரின் நிர்வாகத்தில் இயங்குவதால் எம்மால் உங்கள் கலாச்சாரப்படி இணைந்து செயற்பட முடியும்.
Head Office: Chani House, Lower Park Road, New Southgate, London, N11 1QD England 020 8361 6151
உங்கள் தேவையே எங்கள் சேவை
Fax 020 8368 1008
www.indianfuneral.co.uk

AMBAAL JEWELERS
ரூட்டிங் அம்மன் கோயிலுக்கு அருகாமையில்

தமிழர்களின் விருப்பத்திற் கேற்ற நகைக்களஞ்சியம்
வாரம் 7 நாட்களும் திறந்திருக்கும்
திருத்த வேலைகள் உடனுக்குடன் செய்துதரப்படும்
உங்கள் நகைகளை தரமாகவும், மலிவாகவும், புதுடிசைனிலும் பெற்றிட நாடுங்கள்
அம்பாள் ஜுவலர்ஸ்
176, Upper Tooting Road, London SW 17 7ER
Tel: 020 8672 9955

Serving all the Asian communities in London and countrywide. A complete door-to-door repatriation service is available to and from India.
Asian Funeral Service
ஆசியர் மரணச் சடங்கு சேவை
Free Phone 0800 0269 887
209 Kenton Road, Kenton Harrow, Middlesex
Tel: 020 8909 3737
Mob: 07770 306 644
e-mail asianfuneralservice@btinternet.com
Established in 1984, we are the first and fore most Indian funeral directors providing funeral services in your language, with due respect to your religious and cultural believes. Our unique service is available at any hour including Saturdays and Sundays contact Bharat Shah and Sanjay Shah

உங்களது வீட்டு சாமான்கள் விற்பனை குறித்து பிரசுரிக்க £10.00 மட்டுமே, கார் விற்பனைக்கு £25.00, பிறந்தநாளுக்கு £15.00, மரண அறிவித்தல் (அ) நினைவு நாள் £20.00, மணமகள் (அ) மணமகன் தேவைக்கு £25.00

## 'புதிய உலக ஒழுங்கு' தொழிற்கட்சி மாநாடு

ஒக்ரோபர் ஆரம்பத்தில் பிறைட்டனில் நடைபெற்ற தொழிற்கட்சி மாநாட்டில் புதிய உலக ஒழுங்கமைப்பு பற்றி பிரதமர் பிளேயர் உரையாற்றினார். பிரதமரால் சொந்தமாக தயாரிக்கப்பட்ட இந்த உரை தொழிற்கட்சி மாநாடு எனபதற்கு மாறாக சர்வதேச கண்ணோட்டத்துடன் அமைந்தது. கட்சி உறுப்பினர்கள் பலராலும் மிகவும் பாராட்டப்பட்ட உரை பிளேயரின் எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தியது.

காசாவின் சேரிப்புறத்தில் இருந்து அப்கானிஸ்தானின் மலைகள் வரை மனிதப் பண்பும் சமூகநீதியும் பேணப்படும் புதிய உலக ஒழுங்கு உருவாக்கப்பட வேண்டும் என்றும் சமூகத்தின் வல்லமையால் அதனை சாதிக்க முடியும் என்றும் பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார். பட்டினியில் வாடுபவர்களையும் கைவிடப்பட்டவர்களையும் உதாசீனப்படுத்தப்பட்டவர்களையும் கூட நாங்கள் மறக்கவில்லை என்று பிரதமர் சுட்டிக் காட்டினார்.

தனது உரையில் பட்டினிக்கும் வறுமைக்கும் முடிவு கட்டுவதாக குறிப்பிட்ட பிரதமர் ஏனைய சர்வதேச விடயங்களையும் குறிப்பிட்டார். ஆபிரிக்காவில் பரந்து உள்ள ஊழல், இனப் படுகொலைகள், உலக சுற்றுச் சூழல் என பல சர்வதேச விடயங்களையும் பிரதமர் தொட்டுச் சென்றார். இஸ்ரேலியர்களும் பலஸ்தீனியர்களும் அருகருகே சமத்துவத்துடன் தமது சொந்த மண்ணில் வாழவேண்டும் என்று குறிப்பிட்டார். அப்போது ருவண்டாவில் இடம்பெற்ற இனப்படுகொலை தற்போது இடம்பெற்று இருந்தால் அதனை சர்வதேச சமூகம் பார்த்து கொண்டு இருக்காது என்பதை பிரதமர் ஆணித்தரமாக குறிப்பிட்டார்.

இஸ்லாமை உதாசீனப்படுத்தியதை மேற்கு உலகு ஏற்றுக்கொள்ளும் அதேவேளை இஸ்லாமின் ஒரு பகுதி அமெரிக்கா மீதும் மேற்குலகு மீதும் தவறான எண்ணத்தை கொண்டிருப்பது நிராகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். விஞ்ஞானம் எமக்காக புதிய உலக ஒழுங்கை உருவாக்காது ஆனால் உலகம் ஒரு சமூகமாக வலுவான உணர்வுடன் செயற்பட்டால் அதனை செய்ய முடியும் என்று கூறி பிரதமர் தனது உரையை நிறைவு செய்தார்.

பிரதமருடைய உரை பரவலாக வரவேற்கப்பட்டாலும் அதன் நடைமுறைத் தன்மை சிலரால் கேள்விக்கு உட்படுத்தப்பட்டது. பிரதமரின் உரையில் பிரச்சனைகளுக்கான காரணங்கள் தெளிவாக தெரிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் என்ன விடயத்தை எப்படி செய்யப் போகிறோம் என்பது தெளிவாக இல்லை.

## வவுச்சர் முறை நீக்கப்படும்

ஓராண்டு காலம் மீளாய்வு செய்யப்பட்ட அறிக்கை வெளியிடப்படும் போது வவுச்சர் முறை நீக்கப்பட்டிருக்கும் என போக்குவரத்து மற்றும் பொதுப் பணியாளர்கள் தொழிற்சங்க செயலாளர் பில் மொறிஸ் தொழிற் கட்சி மாநாட்டில் தெரிவித்தார். ஒக்ரோபர் 3ம் திகதி மாநாட்டில் பில் மொறிஸ் உரையாற்றும் போது உள்துறை அமைச்சர் சிரித்தபடி உரையை செவிமடுத்துக் கொண்டு இருந்தார். வவுச்சர் முறையை மிகவும் கண்டித்து வரும் பில் மொறிஸ் அது ஒரு சில்லறை ஒடுக்குமுறை Retail Apartheid என விபரித்தார்.

அவர் தனது உரையில் இன்னும் நான்கு மாதங்களில் தஞ்சம் கோருவோரை சிறைகளில் தடுத்து வைப்பதை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தற்போது ஒரு சமயத்தில் 300 - 400 தஞ்ச விண்ணப்பதாரிகள் 7 சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர்.

'செயற்பாட்டை சரிப்படுத்துவோம்! கறையை அகற்றுவோம்! மக்கள் லொறிகளில் தொங்கியும் மறைந்தும் வராமல் முறையாக வருவதற்கான வழியை ஏற்படுத்துவோம்!' என தனது உரையில் தெரிவித்த உள்துறை அமைச்சர் வவுச்சர் பற்றிய பில் மொறிஸின் கூற்றுக்கு நேரடியாக பதிலளிக்கவில்லை.

## நீதிமன்ற முடிவுக்கு எதிராக உள்துறை அமைச்சு மேன்முறையீடு

தஞ்ச விண்ணப்பத்தை விரைவுபடுத்தும் நோக்கில் ஒகிங்ரன் தடுப்பு மையத்தில் 7 - 10 நாட்கள் தஞ்சம் கோரியவர்களை உள்துறை அமைச்சு தடுத்து வைத்தது தவறு என நீதிபதி திரு கொலின் அவர்கள் தீர்ப்பளித்து இருந்தார். இத்தீர்ப்புக்கு எதிராக அன்ரனி ஜெனரல் லோட் கோல்ட் சிமித் மேன்முறையீட்டு வழக்கை ஆரம்பித்து உள்ளார். வழமையாக அன்ரனி ஜெனரல் வழக்கை வாதிடுவதில்லை. ஆனால் இவ்வழக்கை பொறுத்தவரை உள்துறை அமைச்சு தோல்வி அடைந்தால் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நஸ்டஈடு பல மில்லியனை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அரசாங்கத்தின் தஞ்ச விண்ணப்பத்தை துரிதப்படுத்துவதையும் இது பாதிக்கும் என உள்துறை அமைச்சர் டேவிட் பிளங்கெட் தெரிவிக்கிறார்.

நான்கு ஈராக் குர்திஷியர்கள் தம்மை ஒகிங்ரன் முகாமில் தடுத்து வைத்தது சட்டவிரோதமானது என தொடுத்த வழக்கிலேயே உள்துறை அமைச்சின் நடவடிக்கை சட்டவிரோதமானது என தீர்ப்பளிக்கப்பட்டது. தற்போது அக்குர்திஷியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி மைக்கல் ஹன்லி அவர்களுக்கு £5,000 - £10,000 வரை நஷ்டஈடு கேட்க உள்ளார். அரசாங்கம் இந்த மேன்முறையீட்டு வழக்கில் தோற்றால் தடுத்து வைத்து தஞ்ச விண்ணப்பத்தை விசாரிப்பது குற்றமாவதுடன் இதுவரை ஒகிங்ரன் முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடும் வழங்கப்பட வேண்டி வரும்.

## இலங்கையர்கள் வசித்த வீட்டுக்கு தீ வைப்பு

3 ஆண்களும் ஒரு பெண்ணுமாக நான்கு பேர் வாழ்ந்த வீட்டுக்கு தீ வைக்கப்பட்டு உள்ளது. செப்ரம்பர் நடுப்பகுதியில் சவுத்தோலில் றுட்லன்ட் றோட்டில் உள்ள இலங்கையர் வாழ்ந்த வீடே தீக்கிரையாக்கப்பட்டது. அதிஷ்டவசமாக அங்கிருந்த நால்வரும் காயங்கள் எதுவும் இன்றி தப்பித்தனர். பெருமளவு ஆசியர்கள் வாழும் அப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தை காவல்துறையினர் இனவாத தாக்குதலாக பதிவு செய்து உள்ளனர்.

கண்ணாடி உடைக்கப்படும் சத்தம் கேட்டு எழுந்ததாக குறிப்பிட்ட அயலவர் புகை மணத்தை உணர்ந்ததும் தகவல் தெரிவித்ததாக கூறினார். முன் கதவால் வெளிவந்த தீயை பார்த்த போது வீட்டில் இருந்தவர்கள் தப்பியது அவர்கள் அதிஷ்டம் என்று மற்றுமோர் அயலவர் தெரிவித்தார்.

20க்கு மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் இரு மணிநேர போராட்டத்துக்கு பின் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இத் தீ வைப்பு சம்பவம் அயலவர்களை மிகவும் அதிர்ச்சிக்கும் பீதிக்கும் உள்ளாக்கி உள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் Det Insp David Hurley தலைமையில் நடைபெறுகிறது. இத் தீவைப்பு சம்பவத்துக்கு 20 நிமிடங்களுக்கு முன் சில வெள்ளையின இளைஞர்கள் பெற்றோல் கானுடனும் பெப்பர்கள் அடையப்பட்ட ஜாருடனும் அப்பகுதியில் காணப்பட்டு உள்ளனர். இக்கூட்டத்தில் ஒருவரையாவது பொதுமக்கள் அவதானித்து இருப்பார்கள் என பொலிஸார் நம்புகின்றனர். இருபதுக்களின் நடுப்பகுதியில் உள்ள மொட்டைத் தலையுடைய ஒருவனை பொலிஸார் குறிப்பாக தேடுகின்றனர். காதில் அதிகம் தோடுகள் அணிந்து உள்ள இவனின் காதில் பிறப்பு மச்சம் அல்லது பச்சை குத்தப்பட்டு இருப்பதாக பொலிஸார் கூறுகின்றனர்.

நால்வருடைய உயிரை ஆபத்துக்கு உள்ளாக்க நடத்தப்பட்ட கொடிய செயல் என விபரித்த அதிகாரி டேவிட் ஹேர்லி அதிஷ்டவசமாக தாங்கள் பாரிய காயங்கள் பற்றிய விசாரணையை மேற்கொள்ள வேண்டி இருக்கவில்லை என தெரிவித்தார்.

V.J. CARPETS LTD.
We are now offering
FREE -FITTING
FREE MEASURING
FREE ESTIMATES
FREE LOCAL DELIVERY (Selected Carpets)
START OF CLEARENCE SALE NOW ON
FREE FITTING ON ALL CARPETS
This is just a small example of Large Selection
CALL US ON
020 8574 9033
110 The Green, Southall, Middx. UB2 4BQ

S.M.S. CARPETS
AND FLOOR COVERING
SALE SALE SALE
50% OFF on all remnants
Best offering prices in London area. We beat any written quotation.
Hugh sellection of carpets and Vinyl
813, Romford Road Manor Park E-12
Tel: 020 8553 1488

ஹால் வாடகைக்கு
100-150 பேர் கொண்டு
திருமணம் மற்றும் இதர
வைபவங்களுக்கு ஹால்
வாடகைக்கு கிடைக்கும்.
தொடர்புகளுக்கு
020 8905 7775

JK Shah
Chartered Certified Accountants & Registered Auditors
e-mail: jk@jkshah.com
website: www.jkshah.com
570 Romford Road, Manor Park
London E12 5AF
TEL: 020 8553 2436
FAX: 020 8514 6939

தீராத உங்களின்
குறைகள் யாவும் தீர
அனுகவும்
அன்னை காயத்ரியிடம்.
ஆசி பெற்று
விளங்கிடவும் இன்றே
தொலை தொடர்பு
கொள்ளுங்கள் 020
8952 7775

முத்துக்கள், சுத்தமான நவரத்தினக்கற்கள்
சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின
மோதிரங்கள் ஓடர்களுக்கு
செய்து கொடுக்கப்படும்.
பொன்னுருக்களுக்கு ஏற்ற
சகல ஒழுங்குகளும்
செய்து கொடுக்கப்படும்
உங்கள் எண்ணங்கள் எங்கள் கைவண்ணத்தில்

ரோயல் ஜுவலரி
287, High Street North
Eastham-Manor Park
London E12 6SJ
Tel: 020 8472 5500
ROYAL JEWELRY

# அமெரிக்க முறையிலான 'கிறீன் காட்'

## பொருளாதார அகதிகள் வருகையை இலகுவாக்க திட்டம்

பிரித்தானியாவில் ஊடகங்களாலும் அரசியல்வாதிகளாலும் பெரிதுபடுத்தப்படும் அகதிகள் பிரச்சனையை மட்டுப்படுத்த உள்துறை அமைச்சர் டேவிட் பிளங்கேட் அமெரிக்க முறையிலான 'கிறீன் காட்' முறையை அறிமுகப்படுத்த உள்ளார். இதன் மூலம் பொருளாதார அகதிகளாக வருபவர்களை வெகுவாக கட்டுப்படுத்தலாம் என நம்பப்படுகிறது. மேலும் திருட்டுத்தனமாக வரி செலுத்தாமல் தமது அடிப்படை உரிமைகளை இழந்து தொழில்புரிபவர்களை அவர்களின் எசமானர்களிடம் இருந்து மீட்கவும் இந்த கிறீன் காட் முறை உதவவுள்ளது. இந்த கறுப்பு பொருளாதாரத்தை வெளியே கொண்டுவந்து அதனை திறைசேரிக்குள் சேர்ப்பது பற்றி நிதி அமைச்சர் கோர்டன் பிறவுன் ஏற்கனவே கடந்த ஆண்டு வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் தெரிவித்து இருந்தார்.

பிளங்கேட்டின் கிறீன் காட் முறை 4 பிரிவுகளை கொண்டு உள்ளது. இம்முறையின் படி திறன் சார்ந்த, திறன் சாராத தொழில்கள் என இரு பிரிவுக்கும் தொழிலாளர்கள் பிரித்தானியாவுக்குள் கட்டுப்படுத்தப்பட்ட திட்டத்தில் அனுமதிக்கப்பட உள்ளனர். அவையாவன

1 பொருளாதார காரணங்களுக்காக குடியேற விரும்புபவர்கள் அதற்கான சரியான வழியில் விண்ணப்பிக்கலாம்.

2 வெளிநாட்டு மாணவர்கள் பட்டதாரிகளானதும் தமது நாட்டுக்கு செல்லாமலேயே இங்கு வேலை செய்வதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியும்.

3 காலத்துக்கு காலம் விவசாயம், சுற்றுலாத்துறை ஆகியவற்றில் வேலை செய்ய விரும்புபவர்கள் தற்காலிக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியும்.

4 மருத்துவம், விலங்கு மருத்துவம், தொழில்நுட்பம், நிதி ஆகிய துறைகளில் தேர்ச்சியுடைய வெளிநாட்டவர்கள் இங்கு குடியேறலாம்.

இப்புதிய திட்டத்தின் படி விண்ணப்பங்கள் பிரித்தானியாவுக்கு வெளியே இருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். தஞ்சம் கேட்டு பிரித்தானியாவில் தங்கி உள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியுமா என்பது தஞ்ச மீளாய்வு அறிக்கையை உள்துறை அமைச்சர் பொதுச் சபையில் சமர்ப்பிக்கும் போது தெரியவரும். ஒக்ரோபர் இறுதிப்பகுதியில் அமைச்சர் அறிக்கையை சமர்ப்பிப்பார்.


**கிறான்புறுக் சட்டத்தரணிகள்**

கைலாஷ் சபாபதி ஜெட்ஸம் அலெக்ஸ் ஜீவா டானியல் ஆகியோரால் அண்மையில் உருவாக்கப்பட்ட சட்ட நிறுவனம்.

நாம் கீழ்க்காணும் பட்டியல் உட்பட பல சட்ட பகுதிகளிலும் சிறந்த ஆலோசனையும் உதவியும் வழங்க பயிற்சி பெற்றவர்களும் நம்பகமானவர்களும்.

- குடிவரவு (Immigration)
- வீடு/கடை கொள்வனவு விற்பனவு (Conveyancing)
- குற்ற வழக்குகள் (Criminal Litigation)
- குடும்பம் (Family)
- பொது வழக்குகள் (Civil Litigation)
- சமூக பாதுகாப்பு உதவிகள் (Social Security Benefits)
- வீட்டு வாடகை பிணக்குகள் (Landlord & Tenant)
- விபத்துக்களினால் ஏற்பட்ட காயங்களுக்கான நட்டஈடுகள் (Personal Injury Compensation)
- காவல் நிலையத்திலான சட்ட ஆலோசனையும் உதவியும் (Advice & Assistance at Police Station)

We Undertake work in certain areas of law

தொலைபேசி: 020 8553 9944
தொலைநகல்: 020 8553 9985
முகவரி: 79 Cranbrook Road, Ilford Essex IG1 4PG

Cranbrook solicitors



**MARKANDAY & CO Solicitors** & Commissioners For Oaths 212 kiburn high road, london nw6 4jh.TEL: 020 7624 6301 / 020 7625 43250REQUIRED TAMIL INTERPRETER



**Jeya & Co**
SOLICITORS
Commissioners of Oaths
* Immigration (We do legal aid)
* Conveyancing: Residential & Commercial
* Liquor Licencing

Principal: Malathy Jeyanantham LL.B
Associate: Kavina Ponnampalam LL.B

322, High street north, Manor park, london E12 6SA
DX: 4733 East Ham
Contact us for prompt and proper services



**Genga & Co.**
Solicitors
Administor of Oaths

Legal Aid Francise for Crime and Immigration

Specialists in:
Asylum + Immigration Law
Criminal Law-
Police station
Magitrate court
Crown court

தேர்ச்சி பெற்ற சட்ட வல்லுனர்கள்:
"அகதி அந்தஸ்து குடிவரவு குடியகல்வு குற்றவியல் வழக்குகள்"
"மஜிஸ்டுரேட் நீதிமன்றம், பொலிஸ்நிலையம்"
எந்தவிதமான அவசரத் தேவைக்கும் 24 மணித்தியால தொடர்பு இலக்கம்
0956 569 559
Tel: 020 8795 5020
Fax: 020 8795 5030

Genga & Co.
1st & 2nd Floor
588 High Road Wembley,
Middx. HA0 2AF
E-Mail: Genga8co.wembley.ic24.net



**MANOGARAN & CO.**
SOLICITORS
Administrator of Oaths

Principal:
S. MANOGARAN LL.B
Member of the Law Society
Immigration Law Panel

LEGAL AID WORK UNDERTAKEN

* Immigration and Asylum Matters
* Nationality Matters
* Civil Litigation
*Liquor Licencing

24 HOE STREET, WALTHAMSTOW, LONDON E17 4PH
Tel:: 020 8521 5757 Fax: 020 8521 8202



**RAJA & CO. SOLICITORS**
Criminal Defence Service
Community Legal Service
Specialist Help Point Immigration Welfare Crime
LEGAL AID FRANCHISE
A QUALITY SERVICE
Approved by The Legal Aid Board

295 Balham High Road Tooting Bec London SW17 7BA
Tel: 020 8682 2585 Fax: 020 8682 2575
DX 34006 TOOTING NORTH



**SRIHARANS SOLICTORS**
Community Legal Service
Specialist Help Point Immigration & Nationality

AUTHORISED TO ADMINISTER OATHS
PROFESSIONAL SERVICE FOR FREEDOM AND JUSTICE UNDER THE HUMAN RIGHTS ACT 2000 OF UK AND WITH EUROPEAN CONVENTION ON HUMAN RIGHTS.

A. Sriharan
R. Sriharan
223 THE BROADWAY
SOUTHHALL, MIDDLESEX
TEL: 020 8843 9974 (3LINES)
FAX: 020 8574 1766



**Markandan & Co.**
Solicitors
Empowered to administer oaths
M.Markandan LL.B.

Tel: 020 8514 8188
Fax: 020 8514 8303

* Immigration,Home Office
* Refugee, Asylum
*commercial Conveyancing
* Matrimonial
* Licensing
*Representation at Police Stations
*House,Flat Purchase or Sale Etc.
Legal aid

Thamil House
720 Romford Road, Manor Park,
London E12 6BT

## முகவர் செய்திகள்

### பட்டாசு கடைக்கு அபராதம்

பெருவில் பகுதியில் கடை நடத்திய தமிழர் ஒருவரக்கு அபராதம் விதிக்கப்பட்டு இருக்கிறது. அனுமதி பெற்று பட்டாசு விற்வருக்கு £1000 க்கு சற்று மேல் அபராதம் விதிக்கப்பட்டு இருக்கிறது. பட்டாசுகளை பாதுகாப்பான முறையில் விற்பனை செய்யாமையால் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. தமிழ் வர்த்தகர்கள் பாதுகாப்பு மற்றும் சுகாதார விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

### வாலிபர் மாயம்-பொலிஸ் விசாரணை

கிழக்கு இலண்டனில் சீனப் பெண்ணுடன் வாழ்ந்து வந்த தமிழர் ஒருவர் அண்மையில் காணாமல் போயிருந்தார். இவர் பற்றிய தகவலை தேடிய இவரது சகோதரர் பொலிஸ் நிலையத்தில் விசாரித்த போது அவர் தற்கொலை செய்து மரணமானதாக தெரிவிக்கப்பட்டது. இதனை ஏற்றுக் கொள்ளாத சகோதரர் அது பற்றி மேலதிக விசாரணை நடத்தும் படி பொலிசாரை கேட்டுக் கொண்டு உள்ளார்.

### மட்டக்களப்புக்கு செல்ல மக்கள் தயக்கம்

பிரித்தானியாவில் இருந்து கிழக்கிலங்கைக்கு குறிப்பாக மட்டக்களப்புக்கு செல்ல தமிழர்கள் தயங்குகின்றனர். இங்கிருந்து மட்டக்களப்புக்கு சென்றவர்களிடம் பணம் கேட்கப்பட்டு உள்ளது. மறுப்பவர்கள் தடுத்து வைக்கப்படுவார்கள் என்று மிரட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### திருட்டுக்கார் விபத்துக்குள்ளானது

மூன்று தமிழ் இளைஞர்கள் பயணம் செய்த களவாடப்பட்ட கார் விபத்தக்கு உள்ளானதில் இருவர் அந்த இடத்திலேயே இறந்து உள்ளனர். ஒக்ரோபர் முற்பகுதியில் லுட்டனில் இச்சம்பவம் இடம்பெற்றது. இவ்விளைஞர்கள் கிறடிட் காட் மோசடிகளில் ஈடுபட்டு இருந்ததாகவும் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

### ஆலயம் சோதனைக்கு உள்ளானது

கிழக்கு இலண்டனில் உள்ள ஆலயம் ஒன்றின் மீது கடந்த மாதம் உள்ளாட்சி அதிகாரிகள் திடிர் சோதனை ஒன்றை மேற்கொண்டு உள்ளனர். மக்கள் வாழும் பகுதிக்குள் அமைந்து உள்ள இவ்வாலாயம் அப்பகுதியில் வாழ்பவர்களின் கார் நிறுத்தும் வசதிகளை பாதிப்பதாகவும் அசௌகரியங்களை ஏற்படுத்துவதாகவும் அப்பகுதி மக்கள் முறையிட்டதாக தெரியவருகிறது. இந்த சோதணைகளின் பின்னும் ஆலய செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெறுகின்றது.

### 'தமிழ் தொலைக்காட்சிகள் - மக்கள் ரசனையை மட்டமாக மதிப்பிடுகின்றனர்' - இயக்குனர்கள்

பிரித்தானியாவை தளமாக கொண்டு இயங்கி வருகின்ற தமிழ் தொலைக்காட்சிகள் மக்கள் ரசனையை மட்டமாக மதிப்பிடுவதாக பல மாற்று சினிமாக்களை இயக்கிய இயக்குநரும் சுவிஸ் நாட்டு சினிமா அமைப்பின் உத்தியோக பூர்வமான இயக்குனருமான அஜீவன் உதயனுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் தெரிவித்தார். சுவிஸ் நாட்டில் தங்கப்பதக்கத்தையும் பல விருதுகளையும் பெற்ற இவர் அண்மையில் இடம்பெற்ற சர்வதேச தமிழ் குறும் மற்றும் விவரண பட விழாவுக்காக இலண்டன் வந்திருந்தார். இவருடன் வந்திருந்த நோர்வேயை சேர்ந்த இயக்குனர் தமயந்தி இலண்டனில் வாழும் மாற்று சினிமா படைப்பாளிகள் சக படைப்பாளிகளுக்கு ஊக்கமளிக்க தவறிவிட்டதாக இலண்டன் படைப்பாளிகள் மீது குற்றம் சுமத்தினார்.

சினிசங்கத்தால் நடத்தப்பட்ட இவ்விழாவில் தமயந்தி அவர்கள் THe Ball படத்துக்காக சிறந்த இயக்குனர் விருதைப் பெற்றார். (இச்செய்தி அச்சுக்கு போகும் வரை விருதகள் பற்றிய முழு தகவல்களும் எமக்கு கிடைக்கவில்லை.) இவ்விழாவில் 30 நாடுகளில் இருந்து தயாரிக்கப்பட்ட 110 படங்களில் 52 படங்கள் தெரிவு செய்யப்பட்டு திரையிடப்பட்டது. புலம்பெயர் நாடுகளில் தாம் கலைப்பணி செய்வதாக கூறிக் கொள்ளும் இத்தொலைக்காட்சிகள் அவர்களின் படைப்புகளுக்கு உதவுவதில்லை என்று இரு இயக்குனர்களுமே தெரிவித்தனர். இங்குள்ள தொலைக்காட்சிகள் மக்களுடைய ரசனைகள் எப்பொதும் மட்டமாக இருப்பதாகவும் மக்கள் நல்ல சினிமாவை ஏற்பது இல்லை என்றும் தாமே முடிவெடுத்து தம்மிடம் உள்ள நிகழ்ச்சிகளை மக்களிடம் திணிப்பதாக அவ்வியக்குனர்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் எப்பொதும் உயர்ந்த ரசனை கொண்டவர்கள் என்று தெரிவித்த தமயந்தி சிறந்த நிகழ்ச்சிகளை தொலைக்காட்சிகள் வழங்கத் தவறிவிட்டதாகவும் ஆரோக்கியமற்ற நிகழ்ச்சிகளை இறக்குமதி செய்து வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.



புலம்பெயர்ந்தோர் படைப்புகள்



BurntOak BUILDERS MERCHANTS
All types of building materials at low price
சகல விதமான கட்டிட வேலைகட்குத் தேவையான பொருட்க்கள்,மண்,சீமெந்து,கல், பலகைகள், மற்றும் பல ரகங்கள் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்
இலவச டெலிவரியும் உண்டு
41, Barnfield Road
Burnt Oak
Edgware
Middx. HA0 0AY
Tel: 0208 952 1257/2538

BURGES
GUILD OF MASTER CRAFTSMEN
FREE QUOTES
BURGES WINDOWS & BUILDERS
BURGES PROPERTY SERVICES
One Week in FLORIDA, USA For Booking whole house
Contact us for a price to suit your budget!
117 BURGES ROAD• EAST HAM• LONDON E6 2BL
Tel: 020 8471 8760 Contact: Jasbir S. Mann
Tel: 020 8470 5061 Mob: 07831 858 140
Consumer Protection Association

Air conditioning specialists
KS BUILDING SERVICES ENGINEERING LTD
- Free design & free survey
- Air conditioning and Refrigration systems
- Ventilation
- Eletrical installation & control system
- Portable air conditioning for sale
Website: www.kssiva.com
Email: sales@kssiva.com
FULLY QUALIFIED ENGINEERS
FOR A PROFESSIONAL SERVICE CALL 020 8200 8962
FAX: 020 8200 8918
MOBILE: 07799 142 759
237A Edgware Road, Colindale London NW9 6LU

PANESAR ELECTRICAL CO.
WHOLESALE ELECTRICS
ESTD. 1981
LARGEST CHOICE OF LOW VOLTAGE LIGHTING
DESIGNER SWITCHES & SOCKETS IN STORE
E-mail: raj@panesarelec.fsnet.co.uk
Tel: 020 8472 1873 Fax: 020 8471 6271
364 HIGH STREET NORTH, MANOR PARK
LONDON - E12 6PH


# MILLENNIUM CASH & CARRY

**SPECIALISTS SUPPLIERS OF SOFT DRINKS BEERS & TOILETRIES**

WHITE LIGHTNING
3L X 4
6.99

57 KING EDWARD ROAD
BARKING 1G11 7TS
TEL: 020 8594 1774
FAX: 020 8591 7677

STELLA ARTOIS
33CL & 66CL
10.49




புதிதாக வரும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு பெட்டி
**Pepsi Can** இலவசமாக வழங்கப்படும்

**OPENING HOURS**

MON - FRI - 9.30 AM TO 7.00 PM
SATURDAY - 9.30 AM TO 5.00 PM

OVER 60,000 Sq. Ft. WAREHOUSE

TRADE CUSTOMERS ONLY

குடிவகைகள், **Soft Drinks** போன்றவைகளுக்கு
இது ஒரு பிரசித்திபெற்ற நிறுவனம்

ஆகையால் நாடுங்கள் - MILLENNNIUM CASH & CARRY

BUDWEISER NRB
14.29

RED BULL
11.99

RED SQUARE
24 x 275 ML
14.29

SUNNY DELIGHT 12 x 500ML
3.79

COKE 24 X 33CL (IMP)
3.89

TALENT KITCHEN TOWEL
6x4
3.59

LOOSE LUXURY x 36 TOILET ROLLS
2.89

MARS & SNICKERS STD
8.29

SMIRNOFF ICE
24x 275 ML
16.99

MILLENNIUM WATER 4x5 LITRES
BUY 4/1 FREE
2.99

PRINGLES 12 x 50G P/M 45p
2.49

BACARDI BREEZERS
16.99

CRISTALINE WATER
500ML x 24
2.99
BUY TEN GET 1 FREE

ALL NEW CUSTOMERS - FREE CASE OF PEPSI 24 x 33CL WHEN YOU SPEND 50 POUNDS OR MORE

# ராசிபலன்

## மேஷம்

இங்கு ராசிநாதன் 10-ல் உச்சம் பெற, 9-க்குடைய குரு 3-ல் நின்று 9-ஐப் பார்ப்பதால் உங்களுக்கு எல்லா வகையிலும் வெற்றி, மேன்மை, நன்மை, அனுகூலம் உண்டாகும். அதே நேரம் 3,6-க்குடைய புதன் 19-ம் தேதி வ1ரை 7-ல் நின்று ராசியைப் பார்ப்பது ஒரு தடை. அத்துடன் ஏழரைச்சனி, வாக்குச்சனி, பாதச்சனியாக விளங்குவதால் ாவாக்குச்சனி கோப்பைக் குலைப்பது போலா உங்களுடைய எதிர்கால முன்னேற்றத்தையும், நன்மைகளையும் உங்கள் பேச்சுவார்த்தைகளினாலேயே கெடுத்துக் கொள்வீர்கள்.

4-ந் தேதி சுக்ரன் 7-ல் ஆட்சி பெற்ற பிறகு 5-க்குடைய சூரியனுக்கு நீச்ச பங்க ராஜயோகம் ஏற்படும். அதனால் மனைவி, மக்களின் ஆரோக்கியம் தெளிவடையும். அவர்களின் எதிர்காலத்தைப் பொறுத்த திட்டங்களும் நிறைவேறும்.

## ரிஷபம்

ராசிநாதன் சுக்ரன் மாதத் தொடக்கத்தில் நீச்சமாக இருக்கிறார். சூரியனும், 6-மிடத்தில் நீச்சமாக இருக்கிறார். 4-ம் தேதி சுக்ரன் நீச்சம் தெளிந்து, துலா ராசியில் ஆட்சி பெறுவார். அப்போது சூரியனுக்கும் நீச்சபங்க ராஜயோகம் ஏற்பட்டுவிடும்.

எனவே உங்களுடைய செயல், முயற்சிகளில் நல்ல திருப்பமும், முன்னேற்றமும் வெற்றி வாய்ப்புகளும் பிரகாசமாய்த் தெரியும். ஜென்மச்சனி உங்களுடைய வேகத்தை ாஸ்பீடு பிரேக்கா மாதிரி தடைபடுத்தினாலும், 9-ல் செவ்வாய் உச்ச பலம் பெறுவதால், தெய்வ அனுகூலத்தினாலும், மனைவி அல்லது நண்பர்களின் ஆதரவினாலும், வெற்றி வாய்ப்புக்களைச் சந்திக்கலாம்.

## மிதுனம்

ராசிநாதன் புதன் மாதத் தொடக்கத்தில் 5-ல் இருக்கிறார். 19-ம் தேதி 6-ல் மறைகிறார். 6-க்குடைய செவ்வாய் ̇4-ம் தேதி வரை 28-ல்) மகரத்தில் உச்சமாகவும், பிறகு கும்பராசியிலும், 29-ல்) சஞ்சரிப்பார். ஜென்மத்தில் குருவும், ராகுவும் மாதம் முழுவதும் நிற்க, 9-க்குடைய சனி 1-ல் நின்று விரயச் சனியாக நடக்கிறது.

தொழில் நடைபெறும் பணப்புழக்கம் இருக்கும். கடும் உழைப்பும் காணப்படும்.

எப்படி எடுத்துக் கொண்டாலும் செவ்வாய்க்கு குருபார்வை கிடைப்பதால் விபரீத ராஜ யோகமாக நன்மையும் நடக்கும். குரு பார்க்க கோடி நன்மை. திசாபுத்தி நிச்சயம் நன்மையான பலன்களையே சந்திக்கலாம். இடமாற்றம் அல்லது தொழில் மாற்றம், அல்லது குடியிருப்பு மாற்றம் ஏற்பட இடமுண்டு. அது உங்கள் வாழ்க்கையில் புதிய திருப்பமாகவும், மறுமலர்ச்சிக்குரிய எதிர்காலமாகவும் அமையலாம்.

## கடகம்

ராசிநாதன் சந்திரன் மாதத்தொடக்கத்தில் மேஷத்தில் இருக்கிறார். ராசிக்கு சனி செவ்வாய் பார்வை கிடைக்கிறது. பொதுவாக ஒரு ராசியில் செவ்வாய் - சனி சேர்ந்தாலும் அல்லது பார்த்தாலும் பிரச்சனைகள் தான்.

உங்கள் அமைப்புக்கு பிரச்சனைகளைக் கண்டு பயந்து ஓதுங்கமாட்டீர்கள். எதிர்த்து நின்று போராடி சமாளிப்பீர்கள். துன்பங்களைக் கண்டு துவள மாட்டீர்கள். எந்தச் சூழ்நிலையிலும், கண்கலங்கி அழ மாட்டீர்கள்.

வெற்றி முன்பின்னாக ஏற்பட்டாலும், அடைவது உறுதி. கீழ்க்கோர்ட்டில் ஜெயிக்காவிட்டாலும், மேல் கோர்ட்டில் ஜெயிப்பதற்கு சமம். 3-1-க்குடைய புதன் 19-ந்தேதி முதல் 5-ல் மாறுவார். அதற்கு முன்னால் 16-ந்தேதி ̇-க்குடைய சூரியனும் 5-ல் மாறுவார். சூரியன், புதன் சேர்க்கை, தொழில் மேன்மை எண்ணங்களில் ஆணித்தரம், முயற்சிகளில் விடாநம்பிக்கை, வைராக்கியம், சாதனை இவற்றால் எண்ணியதை ஈடேற்றுவீர்கள்.

## சிம்மம்

ராசிநாதன் சூரியன் - மாதம் முற்பகுதி வரை 3-ல் நீச்சமாக இருக்கிறார். அவருக்கு வீடு கொடுத்த சுக்ரன் 4-ந்தேதி வரை கன்னியில் புதனோடு பரிவர்த்தனை பிறகு துலாத்தில் ஆட்சி. எனவே முழுக்க, முழுக்க சூரியனுக்கு நீச்சபங்க ராஜயோகம் ஏற்படுகிறது. ராசிக்கு 5-க்குடைய குரு பார்வையும் கிடைக்கிறது.

எனவே தீபாவளி நெருங்குகிறது. செலவுகள் நிரம்புகிறது. கையிருப்போ சுருங்குகிறது என்று கவலைப்பட்ட நெஞ்சங்கள் அனைத்தும் பஞ்சம் பறந்துவிட்டது

குரு பார்ப்பதால், குருவருளும், திருவருளும் இருந்தால், பூர்வ புண்ணிய பலத்தால், வீழ்ச்சியிலிருந்து மீளலாம்.

## கன்னி

ராசிநாதன் புதன் மாதத்தொடக்கத்தில் துலாராசியில் சுக்கிரனோடு பரிவர்த்தனையாக இருக்கிறார். நீச்சபங்கம் பெற்ற சூரியனோடும் சம்பந்தம். நவம்பர் 4-ம் தேதி சுக்ரன் துலாராசியில் ஆட்சியாக மாறி, சூரியன், புதன் சம்பந்தம் பெற்று வலுவடைவார்.

இது உங்களுடைய வாழ்க்கையில் தொழில் அமைப்பில் நல்ல திருப்பங்களை ஏற்படுத்தும். உங்கள் நீண்டகாலத் திட்டங்களும், எண்ணங்களும், வெற்றி வாய்ப்பாக நிறைவேறும். வாக்கு, தனம், குடும்பம், எல்லாவற்றிலும் நன்மையான பலன்களை எதிர்பார்க்கலாம்.

## துலாம்

ராசிநாதன் சுக்ரன் 4-ம் தேதி வரை 1-ல் நீச்சமாக இருக்கிறார். ஆனால் சுக்ரனுக்கு வீடு கொடுத்த புதன் துலாத்தில் பரிவர்த்தனையாக இருப்பதால் நீச்சபங்க ராஜயோகம் பெறுவார். 4-ம் தேதி முதல் சுக்ரன் துலாத்தில் ஆட்சி அடைவார்.

உங்களுடைய செயல், முயற்சி, கடமை, காரியங்களில் எந்த சுணக்கமும் இல்லாமல், எல்லாம் இணக்கமாகவே ஈடேறும். 16-ம் தேதி வரை சூரியன் சுக்கிரனோடு சம்பந்தம். 19-ம் தேதி வரை புதன் சுக்கிரனோடு சம்பந்தம். எனவே அட்டமத்துச்சனி நடந்தாலும், அதன் வேகத்திலிருந்து விடுபட்டு, உங்கள் எண்ணங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

சிலருக்கு இடப்பெயர்ச்சி ஏற்படும். வீடு மாற்றம் அல்லது தொழில் மாற்றம் ஏற்பட இடமுண்டு.

## விருச்சிகம்

ராசிநாதன் செவ்வாய் ̇4-ம் தேதி வரை 3-ல் உச்சமாக இருக்கிறார். 6-மிடம் 9-மிடம், 10-மிடங்களைப் பார்க்கிறார். 6-மிடத்துக்கு உடையவர் 6-மிடத்தையே பார்ப்பதால் கடன், போட்டி எதிர்ப்பு, வைத்தியச்செலவு ஆகிய 6-ம் பாவம் வலுவடையும் என்பது பொருள்.

ராசியாதிபதி பாக்கிய ஸ்தானத்தையும் ஜீவன ஸ்தானத்தையும் பார்ப்பதால், பூர்வ புண்ணிய பாக்கியம் உண்டாகும். உங்கள் எதிர்காலம் இனிய காலமாக அமையும்.

## தனுசு

ராசிநாதன் குரு, ராசிக்கு 7-ல் நின்று ராசியைப் பார்ப்பதால் யோகாதிபதி செவ்வாய் உச்சமாகவும், சூரியன் நீச்சமாகவும் இருந்தாலும் சூரியன் நீச்ச பங்கமடைவார். குரு பார்வையைப் பெறுவார். எனவே உங்களுடைய அடிப்படை வாழ்க்கை வசதி, சௌகரியங்கள் எதற்கும் எந்தக் குறைபாடும் இல்லை. இறைவனிடம் பிரார்த்தனை செய்வது போல ாமனமது செம்மையானால் மந்திரமது ஜெபிக்க வேண்டாமா என்பது முன்னோர்களின் வாக்கு. செட்டிநாட்டில் ஒருவரை வாழ்த்தும்போது மனம்போல் வாழ்க! என்பார்கள். ஆகவே மனத் தூய்மையோடு வாய்மையைக் கடைப்பிடித்தால் நேர்மையாக செயல்பட்டால், நவக்கிரகங்களும், உங்களுக்கு நல்லதே செய்யும்.

## மகரம்

ராசிநாதன் சனி ராசிக்கு 5-ல் நின்று 7-மிடம், 11-மிடம் ̇-மிடங்களைப் பார்க்கிறார். அதே 7-மிடத்தை பாதகாதிபதி செவ்வாய் ஜென்மத்தில் உச்சம் பெற்று பார்க்கிறார். செவ்வாயின் பார்வை 4-8-மிடங்களுக்கும் கிடைக்கிறது.

அடிப்படை பாதிப்புக்கு இடமில்லை என்றாலும், வெற்றிகள் உங்களைத் தேடி வந்தாலும், கடைசி நிமிடம் வரை மனம் அலைபாய்ந்து கொண்டிருக்கும். மாத பிற்பகுதியில் சூரியனும், புதனும், 11-மிடத்தில் வந்து அமரும்போது சனியின் பார்வையைப் பெறுவதால் எதிரிகள் உதிரிகளாகி விடுவார்கள். வெற்றி உங்கள் பக்கமே. ராசிக்கு யோகாதிபதியான சுக்கிரன் ஆரம்பத்தில் நீச்சமாக இருந்தாலும் 4-ம் தேதி முதல் 10-ல் ஆட்சி பெறுவார். அதனால் தொழில்துறையில் முன்னேற்றம், நன்மைகளும், வெற்றியும் எதிர்பார்க்கலாம். புதிய தொழில் துறையில் வரவுகளுக்கு இடமுண்டு. வருமானம் பெருக்கம் உண்டு.

## கும்பம்

ராசிநாதன் சனி. ராசிக்கு 4-ல் நின்று ராசியைப் பார்க்கிறார். அத்துடன் ̇-11-க்குடைய குருவும் ராசியைப் பார்க்கிறார். இருவரின் பார்வையும் உங்களுக்கு கா்ணனுக்கு கவசகுண்டலம் அமைந்தது போல உங்களுக்கு பாதுகாப்பாக இருக்கிறது. 4-ல் நின்று தொழில் ஸ்தானத்தைப் பார்க்கிறார். அதற்கு 210-மிடத்துக்கு) குரு மறைகிறார். எனவே நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு தனக்கு கீழ் பணிபுரியும் ஆட்களின் கவனக்குறைவால் ஏற்படும் விபரீத சங்கடங்களினால் தலைவலிப் பிரச்சனையாக இருக்கும். நீச்சல் தெரியாமல் தண்ணீரில் விழுந்தவனை காப்பாற்ற கை கொடுத்தவனையும் நீரில் கிடப்பவன் இழுத்துக் கொண்ட கதைதான்.

மாதக் கடைசியில் செவ்வாய் கும்பத்துக்கு மாறும்போது செவ்வாயும் சனியும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வதால், கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக சங்கடங்களை சந்திக்க வேண்டும். மனைவி, மக்கள் வகையில் பாதிப்புக்கு இடமில்லை. உடன்

(தொடர்ச்சி 20ம் பக்கம்)

palm
RESTAURANT

ஒரே கூரையின் கீழ்
ஓராயிரம் சுவை

சுவைப்பிரியர்களின்
சொர்க்கபுரி

சைவ அசைவ உணவு வகைகள் கார சிற்றுண்டிகள் Buffet வசதிகள்
பார்ட்டி வசதிகள். சிக்கன விலை, துரிதமான சேவை, வாய்க்கு ருசி.
24 மணிநேர தொலைபேசி ஓடர்கள். தரம், கனிவு, நியாயமான விலை
இலவச டெலிவரி சேவை
அழையுங்கள்

102 Palmerston Road, Walthamstow, London E17 6PZ
020 8520 7465
07956 961910
Party Orders Welcome - Anywhere, Anyplace

தமிழினி
TAMILINE RESTAURANT
தமிழினி உணவகம்
SRILANKAN ORIGINAL SEA FOOD RESTAURANT



இறால் மீண், நண்டு, கணவாய், சிங்கறால்(Lobsters) நீங்கள் விரும்பும் சுவைக்கேற்ப உடனுக்குடன் செய்து தரப்படும். இலங்கையின் கடலோரப்பகுதி சுவையை நீங்கள் இலங்கையில் அருந்தத் தவறிவிட்டிருந்தால் மீண்டும் ஓர் அரிய சந்தர்பத்தை உங்களுக்கு தமிழினி உணவகம் அதே சுவையுடன் தருகின்றது.
செவ்வாய் தவிர்த்த மற்ற
ஆறு நாட்களும் திறக்கப்படும்.
தொலைபேசி இலக்கம்



020 8813 6170
128, UXBRIDGE ROAD,
HAYES, MIDDLESEX
U.K

## ராசிபலன் தொடர்ச்சி...

பிறந்த வகையில் கருத்து வேறுபாடும், ஒட்டுதல் உறவில் பிரச்சினைகளும் ஏற்படும். மனைவி வழி உறவினர்களால் தவிர்க்க முடியாத செலவுகள் உண்டாகும். வெளிநாட்டு வர்த்தக தொடர்பு, ஒரு சிலருக்கு நஷ்டமாக முடியும். வியாபாரிகள் நேரம் காலத்தை அனுசரித்து வைத்துப் பார்ப்பதை விட விற்றுப் பார்ப்பது உத்தமம் என்பதை கடைப்பிடிப்பது நல்லது.

மீனம்

ராசிநாதன் குரு ராசிக்கு 4-ல் நின்று 8-மிடம் 10-மிடம், 1-மிடம் ஆகியவற்றைப் பார்க்கிறார். குருவுக்கு ராகு, கேது சம்பந்தம் கிடைக்கிறது. குருவுக்கு வீடு கொடுத்த புதன் 19-ம் தேதி வரை ராசிக்கு 8-ல் மறைவாக இருக்கிறார்.

அடிப்படை வாழ்க்கை வசதிகள், சௌகரியங்களுக்கு குறைவில்லை. அதே சமயம் உங்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்தைக் கண்டும், தொழில் உயர்வைப் பார்த்தும், வயிற்றெரிச்சல் படுகிறவர்களும், பொறாமைப் படுபவர்களும் நிறைய உண்டு. அதிலும் நீங்கள் யாரை உருவாக்கி விட்டீர்களோ, அவர்களே உங்களுக்கு எதிர்ப்பு சக்தியாக மாறுவார்கள்.

ஆரம்பத்தில் அனுதாபத்தின் காரணமாக பாம்புக்கு பால் வார்த்த மாதிரி நன்றி விசுவாசம் இல்லாத துரோகிகளை வளர்த்து விட்டீர்கள். அதன் பலன் எதிரொலிக்கிறது. இருந்தாலும், ஈதர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். ஆனாலும் தர்மமே வெல்லும்ா என்பது பொய்யாகாது. சத்தியம் தோற்றதாக சரித்திரமே இல்லையே!

-9-க்குடைய செவ்வாய் 11-ல் உச்சமாக இருந்து -மிடத்தைப் பார்க்கிறார். எனவே உங்கள் உழைப்புக்கேற்ற பலனை உரியவர்கள் தராவிட்டாலும், காலம் எந்த ரூபத்திலாவது தருவது உறுதி.

# 30,000 பேரை திருப்பி அனுப்பத் திட்டம்

## நாளொன்றுக்கு 100 பேர் வரை கைது செய்யப்படுவார்கள்

தஞ்சு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் முழு மூச்சாக நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு 12,000 பேர் திருப்பி அனுப்பப்பட உள்ளனர். அடுத்த ஆண்டு 30,000 பேர் திருப்பி அனுப்பப்பட உள்ளார்கள். தஞ்சு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களில் 75 வீதமானவர்கள் இலண்டனிலேயே வாழ்கிறார்கள். இவர்களை கைது செய்து வெவ்வேறு காவல் நிலையங்களில் தடுத்து வைப்பதற்கு பதிலாக இவர்களை கைது செய்து ஒரே இடத்தில் தடுத்து வைத்து திருப்பி அனுப்ப குடிவரவு அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர்.

கைது செய்யப்படும் தஞ்ச கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களை தடுத்து வைப்பதற்காக ஓர் இடத்தை ஒழுங்கு செய்யும்படி மெற்றோபொலிட்டன் பொலிஸ் ஆணையம் கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது. தற்போது வட மேற்கு இலண்டனில் உள்ள ஓர் பொலிஸ் கட்டடம் இதற்காக தெரிவு செய்யப்பட்டு இருப்பது தெரியவந்து உள்ளது. ஆனால் £2.5 மில்லியன் செலவில் கட்டப்பட உள்ள புதிய கட்டடத்தில் 35 பேரை மட்டுமே தடுத்து வைக்க முடியும்.

தற்போது நாளொன்றுக்கு தஞ்ச கோரிக்கை நிராகரிக்கப்பட்ட 10 பேர் கைது செய்யப்பட்டு வெவ்வேறு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். அடுத்த ஆண்டு இவ்வாறு கைது செய்யப்படுபவர்கள் எண்ணிக்கை 80 - 100 வரை அதிகரிக்கும் என குடிவரவு சேவைகள் பிரிவு மதிப்பிடுகிறது. கைது செய்யப்படுபவர்களை வெவ்வேறு இடங்களில் தடுத்து வைக்கும் போது அவர்களுக்கு ஆதரவான போராட்டங்கள் வெவேறு காவல் நிலையங்களில் மேற்கொள்ளப்படலாம் என்பதால் பொலிஸாரின் நாளாந்த கடமைகள் தடைப்படும் என மெற்றோபொலிட்டன் பொலிஸ் ஆணையக கொமாண்டர் ஸ்டிவ் றொபேட்ஸ் கருதுகிறார். மேலும் ஒரே இடத்தில் கைது செய்தவர்களை தடுத்து வைப்பதன் மூலம் மற்றைய காவல் நிலையங்கள் மீதான அழுத்தம் குறையும் என்றும் அவர் நம்புகிறார்.

செப்ரம்பர் இறுதிப் பகுதியில் பிளாஸ்ரோ ஸரேசனில் வைத்து தஞ்ச கோரிக்கை நிராகரிக்கப்பட்ட சில தமிழர்கள் கைது செய்யப்பட்டதாக தெரியவருகிறது. ஆனால் அது பற்றிய எந்த உத்தியோகபூர்வமான செய்தியும் எமக்கு கிடைக்கவில்லை. தமிழர்கள் சிலர் ஏற்கனவே திருப்பி அனுப்பப்பட்டு உள்ளனர். ஆனால் அவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் சட்ட நிறுவனங்கள் அது பற்றிய தகவல்களை தமது நிறுவனத்தின் பெயர் கெட்டுவிடும் என்பதால் வெளிப்படுத்தாமல் உள்ளனர். கடந்த ஆண்டு ஒக்ரோபரில் அமுலுக்கு வந்த புதிய சட்ட நடைமுறையின் படி புதிய சூழ்நிலைகளை

காரணம் காட்டி புதிய தஞ்ச விண்ணப்பத்தை பதிவு செய்யும் முறை காலாவதியாகிவிட்டது. அப்படி புதிய விண்ணப்பத்தை பதிவு செய்துவிட்டு இருந்தவர்களே தடுத்து வைக்கப்பட்டு அனுப்பப்பட்டதாக சில தமிழர் சட்ட அமைப்புகள் நம்புகின்றன. ஏற்கனவே தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் தற்போது மனித உரிமைகள் சட்டத்தின் பிரிவு 65இன் கீழ் தமது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று கோருகின்றனர்.



VACANCIES

ஆசிரியர்கள் தேவை

கர்நாடக சங்கீதம், வயலின், தபேலா, மிருதங்கம், கீபோர்டு, வீணை மற்றும் பரத நாட்டியம் பயிற்றுவிக்க அனுபவம் வாய்ந்த ஆசிரியர்-ஆசிரியைகள் தேவை.

விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய முகவரி:
Hindu Minors Club
MAHATHMA FOUNDATION
25 - 27 High Street Edgware,
Middx. HA8 7EE
(Please apply with your CV and Photograph)

PAPAYA Restaurant
MODERN CEYLON CUISINE
ANY PASTA (PENNE/OR SPAGUETTI/OR TAGLIATELLE) * WITH NAPOLI SAUCE
KOTHU ROTTI/or STRING HOPPER
* WITH CHICKEN/or LAMB/or VEG CURRY
£3.00 Takeaway Only
PARTY ORDERS WELCOME
Tel: 020 8866 5582 Fax: 020 8866 5582
15 Village Way East, Rayners Lane, Harrow, Middx. HA2 7LX
www.papayauk.com E-mail: papaya@papayauk.com



LISA TIMBERS LTD
Importers of Hardwood & Parquet Flooring
Cumberland Business Park, Cumberland Avenue, Park Royal NW10 7RX
Tel: 020 8961 9030 Fax: 020 8961 9484

BODY WARMERS • HIKING BOOTS
HARTEX
Established 1969
THE GREAT OUTDOORS
PULLOVERS
COOKWARE
TENTS
RUCKSACKS
HAMMOCKS
HEADWEAR
MAPS
GAITERS
SHORTS
SOCKS
THERMAL UNDERWEAR
GROUND SHEETS


COMBAT CLOTHING
RAINWEAR
BOOTS
GLOVES
BELTS
WATER BOTTLES
BODY WARMERS
WEBBING
HIKING SOCKS
FOAM MATS
AIR BEDS
TENTS • SLEEPING BAGS • AIR BEDS • MAP CASES
RAINWEAR • CUTLERY SETS AND PLATES • WATER BOTTLES
COMPRESSOR BAGS • MONEY BELTS
55 Victoria Road
Ruislip Manor
Middlesex HA4 9BS
TEL: 01895 634244
321 Northolt Road
South Harrow
Middlesex HA2 8JA
TEL: 020 8864 3333
OPEN 7 DAYS